# ஈழமுரசு
அவுஸ்திரேலியா

முரசு : 01 முழக்கம் : 278 *10 October 2013* Vol : 01 Issue :278




இதயத்தின் இருப்பிடம் சரிவு 10,11

இன்னும் அணையாத பெருநெருப்பு



06



படைகளின் பசிக்கு ஆகாரமாகும் அகதிகள்!

15



# நல்லதோர் வீணை செய்தே...!


RASANA
School of Aesthetic Arts
SATURDAY
19 OCTOBER 2013 6:30PM
at HURSTVILLE
ENTERTAINMENT CENTRE
16 Macmahon St, Hurstville
அடங்காப் பற்று
Excellent Jewellers
Major Sponsor
Choreographed by Seran Sribalan
All proceeds go to Patchwork
Assisting persons with disabilities, affected by war
Yarl Function Centre
Fashion Mart
Sri Ganesh Selections
Cabarita Family Dental Care
Kesiken's Flower Manavarai
TSS Worldwide Money Transfer
Professional Accountants Services
Selvatel Pty Ltd
Nithadigil Vision
Vim Tech Pty Ltd
Inbath Thamil Oli
KST Spice Corner
Thamilini Spice Shop
Dr Balan
Anjappar
Sun Video
Heart Care
World Link
Sun Takeaway
for Booking and further details: Dr. Balan 9746 3850 Seran 0452 224 205 Sribalan 0449 201 103

இலங்கை அரசமைப்பின் படி கட்டாயமாக ஜனாதிபதி அல்லது ஆளுநர் முன்னிலையில்தான் ஒரு முதலமைச்சர் பதவியேற்க வேண்டும் என்று சட்டமிருந்தால் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்த சந்தேகம் எழுந்திருக்காது. ஆனால் மேல்நீதிமன்ற நீதிபதி அல்லது பிரதமநீதியரசர் என்போர் முன்னிலையில்கூட பதவியேற்க கொள்ள வசதி இருக்கும்போது, இப்படி மஹிந்தவின் காலில் அட்டாங்க நமஸ்காரம் செய்வதை மக்களால் ஜீரணிக்க முடியவில்லை

# நல்லதோர் வீணை செய்தே...



நிகரிலன்

'நல்லதோர் வீணை செய்தே - அதை நாளும் நலங்கெடப் புழுதியில் எறிவ துண்டோ?"

ஏனோ இந்தப்பாடல் வரிகள்தான் இப் போது வடக்கின் ஒவ்வொரு தமிழர்கள் மனதி லும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. எல்லாத் திசைகளிலும் அனல் அடிக்கும் பாலைவனத்தில், நாள் கணக்கில் நாவ றண்டு ஒரு சொட்டு தண்ணீருக்காக ஏங்கிக் கொண்டிருக்கையில் திடீரென ஒரு நீர்ச்சுனை தோன்றும். அதைப் பருகி தாகம் தணிக்க ஓடிச்சென்றால், தெரிந்தது நீர்ச்சுனையல்ல, கானல் நீர் தான் என்ற உண்மை தெளிவானால் எப்படி இன்னும் மனம் சோருமோ, அப்படித்தான் வடக்கு மக்களின் மனநிலையும் இருக்கிறது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமக்கான விடிவு அதோகதிதான் என்று மனம் புழுங்கிக்கொண்டிருக்கையில், புதிய மீட்பர்களாக தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்ட கூட்டமைப்பின் வளைந்து கொடுக்காத ஜனநாயகப்போரில் தாமும் பங்கெடுக்க வேண்டும் என்ற பெருவிருப்பில் தான் மக்கள் மகோன்னத வெற்றியை அந்தக்கட்சிக்கு வழங்கினார்கள். ஆனால் தேர்தல் முடிந்தபின்னர் தாங்களும் சராசரி அரசியல்வாதிகளே என்று நிரூபிக்கும் கைங்கரியங்களை தொடர்ச்சியாக அரங் கேற்றத் தொடங்கியுள்ளது கூட்டமைப்பு. ஜனாதிபதிக்கு முன்னால் முதலமைச்சர் பதவிப்பிரமாணம் செய்தமை, அமைச் சுப்பங்கீட்டில் ஏற்பட்ட குத்துவெட்டுக்கள் என்பன எவ்வளவு சடுதியாக தங்கள் மீட்பர்கள் என கூட்டமைப்பை மக்கள் தலையில் வைத்துக் கொண்டாடினார்களோ, அதை விடவும் வேகமாக அதே கூட்டமைப்பை காலில் போட்டு மிதிக்கும் நிலையை ஏற்படுத்தி விட்டன.

போருக்குப் பின்னான காலத்தில் அநேகவீடு களில் ஒவ்வொரு தாய்மாரின் உள்ளத்திலும் ஒப்பாரி மட்டுமே மௌனத்திரைக்குள் ஒளிந்து ஒலித்தபடி இருந்தது. ஏனெனில் போரின் இருளில் எங்களின் இளையதலைமுறையின் உயிர்கள் ஈவிரக்கமின்றி அதிகாரத்தால் காவு கொள்ளப்பட்டிருந்தன. விடுதலைக்காகப் போராடப்போனவர்களை மாத்திரமன்றி, உயிர்ப்பயத்தில் பதுங்கு குழிக்குள் ஒளிந் திருந்தவர்களைக் கூட தப்பிக்க அதிகாரம் அனுமதிக்கவில்லை. மூன்று தசாப்தங்களா எம்மினத்தின் மீது நிகழ்ந்து வந்த இன அழிப்பின் உச்சக்கட்டம் முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றப்பட்டிருந்தது. எங்கும் குருதியும், ஓலங்களும், பிணங்களும், தனித்து துடித்தபடி கிடக்கும் உடல் அவயவங்களும் அந்த மணல்வெளியை நிறைத்திருந்திருந்தன. குடியிருக்குமிடமெல்லாம் சவக்கிடங்கானது. குண்டு மழையில் தப்பிப்பிழைத்தவர்கள் சீருடைக்காரர்களால் பிடிக்கப்பட்டு, நிர்வாணக் கொலைக்குழிக்குள் தள்ளப்பட்டனர். பெண் கள் பலவந்தப்புணர்வுக்கு பொதுவெளியில் உட்படுத்தப்பட்டு, பின்னர் வெடி வைத்து சிதை க்கப்பட்டனர். அப்படியும் வெறியடங்காத சில சீருடைகள் பெண்களின் பிணங்களையும் மணல்வெளியில் புணர்ந்து, இச்சை தீர்த்தன.

இவ்வளவு துயர்களையும் சுமந்தவர்கள், அதன் பின்னும் ஓவென்று ஒருதரம் கத்தி தங்களுக்காக தாங்கள் அழுவதற்குக் கூட அனுமதிக்கப்படாத நிலையே நீடித்தது. புலிக ளின் வீழ்ச்சிக்கு பின்னர் மக்களை அடக்கி ஒடுக்கி, சில சலுகைகளை விட்டெறிவதன் மூலம் அவர்களின் உரிமைக்கான குரலை தனக்கிசைவான திசையில் பயணிக்கச் செய்துவிடலாம் என்பதே ஆட்சியாளர்களின் எண்ணமாக இருந்தது.

அதிகாரத்தின் எண்ணத்தை செயற்படுத்தும் பொறுப்பு, எள் என்னும் முன்னரே எண் ணெயாக வந்து நிற்கும் இணக்க அரசி யல் முகவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களும் வாரியிறைக்கப்படும் அரசநிதி யை தங்களின் சொந்தச் சொத்துப்போன்று மக்களை விடுதலை என்ற பாதையை மறக்கச்செய்து, அபிவிருத்தி என்ற திசை நோக்கி அழைத்துச் செல்லமுற்பட்டனர். ஏற்கனவே போருக்காக திறைசேரியின் அத்தனை செல்வப்பாத்திரங்களையும் அரசு வழித்து துடைத்து விட்டதால், அபிவிருத்திக்காக போர் நடந்த இடங்களைக்காட்டி உலகத்திடம் பிச்சையெடுத்து, அதனையே தான் ஏதோ பெருமனது படைத்து தருவதாக அரசும் பாவனை செய்தது. ஆனால் என்னதான் அபிவிருத்தி என்ற பெரும்போர்வை கொண்டு மூடியபோதும், போரின் காயங்களையும் , வலிகளையும், நிணங்களையும் மறைக்கவே முடியவில்லை. தங்கள் பிள்ளைகளை, கண-வனை, மனைவியை, சகோதரர்களை கண்முன்னே கொன்றவர்களை மக்கள் மன்னிக்கத்தயாரகவில்லை. தங்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு சலுகை யும் அவர்களின் இழப்பை ஒருபோ தும் ஈடுசெய்யப்போவதில்லை என்பது அவர்களுக்கு தெரியும்.

இறுதிப்போரில் நடந்த அக்கிரமங்களின் ஆதாரங்களாக புகைப்படங்களும் , காசொ-ணாலிகளும், பகட்டுத்திரையின் ஓரங்களை எரித்துக் கொண்டு, உண்மையின் குரல்கள் உலகமுற்றத்தில் ஒலிக்கத் தொடங்கின. தமிழர்கள் மீதான தன் குருட்டுப்பார்வையை மீள்பரிசிலனை செய்தது உலகம். நமக்குச் சாதகமான சில கதவுகள் திறந்து கொண்டன. 'போர் முடிந்துவிட்டது தானே. தமிழர்களுக்கு இனியும் நல்லிக்கணத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்வை வழங்காமல் பின்னடித்தால் விளைவு வேறாக இருக்கும்' என்று கண்டிப்பாக உலகம் சொன்ன பின்னும் இலங்கை நாடகமாட முடியாது. ரமணா விஜயகாந்த் பாணியில் சொல்வதென்றால் "இலங்கை அரசுக்கு தமி ழில் பிடிக்காத வார்த்தை நல்லிணக்கம்". ஆனால் பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ அதை நிறைவேற்றத்தானே வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த ஜெனீவாத்தொடரில் எல்லா நாடுகளும் கடித்துக் குதறிவிடக்கூடும்.

இத்தகைய அழுத்தத்தின் பேரால் தான் , தன் பிடிவாதத்தை கைவிட்டு வடக்குத் தேர்தலை நடத்தியது அரசு. மனதுக்குள் நாளும் பொழு-தும் ஒப்பாரிகளோடு வாழ்ந்துகொண்டிருந்த மக்கள், தம்மை முள்ளிவாய்க்காலில் துடிதுடிக்க வீழ்த்திய அதிகாரத்தை தேர்தலில் தங்கள் முன் தலைகுனிய வைக்க கங்கணம் கட்டினர். இந்த நிலையில் மாற்றுத்தெரிவுகள் வேறேதும் இல்லாத நிலையில் அவர்களின் ஒரே நம்பிக்கையாக கூட்டமைப்பு மாத்திரமே எஞ்சியது.தேர்தலின் ஆரம்பத்திலேயே முதல மைச்சர் வேட்பாளர், ஏனைய வேட்பாளர்கள் விடயத்தில் கூட்டமைப்பு தடுமாறினாலும், பின்னர் புலிகளின் பிரதிநிதிகள் போன்று மேடைகளில் முழங்க, மக்கள் வாக்குகள் கொண்டு அரசை செப்ரெம்பர் 21ஆம் தி கதி வடக்கில் சாய்த்தனர். வழக்கமாகவே தேர்தல் என்றாலே தங்களுக்கும் அதற் கும் சம்பந்தமில்லை என்பது போல விட் டேத்தித்தனத்தோடு நடந்து கொள்ளும் வடக்கு மக்கள் அன்றைக்கு "இது எங்களின் வரலாற்றுக் கடமை" என்பது போல பேரெழுச்சி கொண்டு வாக்களிக்க வந்தனர். இதற்கு முக்கிய காரணம் "இணங்கிபோக நாம் தயா ரில்லை. எங்கள் உரிமைகளோடு வாழவே நாம் விரும்புகிறோம்" என்ற செய் தியைச் சொல்லத்தான் இந்த வாக்குப் புரட்சி நடந்தது. தங்களுக்கான தமிழர் அரசின் அத்திபாரம் போடப்படுவதாக நினைத்தே தங்களின் ஒவ் வொரு வாக்கையும் அளித்தனர்.

மக்களின் ஆணை கிடைத்ததும் " நாங்கள் ஒருபோதும் ஆளுநருக்கு முன்னாலோ அல்லது ஜனாதிபதிக்கு முன்னாலோ பதவியேற்க மாட்டோம்" என்று கூட்டமைப்பு அறிவிக்க மக்களுக்குப் புல்லரித்தது. ஆளுநருக்கு முன்னால் பதவிப்பிரமாணம் செய்யாமல், நிய-மனக் கடிதத்தை மட்டும் பெற்றுக் கொண்டார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். "நாங்கள் சரியானவர்களையே தேர்ந்திருக்கிறோம்" என்று தம்மைத்தாமே பாராட்டிக் கொண்டனர்.ஆனால் அதன் பின்னர் மீண்டும் முருங்கைமரத்தில் வேதாளம் ஏறிக்கொண்டது. அமைச்சுப்பதவிகள் யாருக்கு என்பதில் கூட்டமைப்புக்குள் குத்துவெட்டுகள் தொடங்கின. கூடி நின்று மக்களிடம் வாக்குக் கேட்டவர்கள் கன்னை பிரிந்து நின்று அடிபடத்தொடங்கினர். அமைச்சுப்பதவி குறித்த இழுபறி நீடிக்கவே செய்தது. இந்தக்குழப்பம் உச்சக் கட்டத்தை தொட்ட அடுத்தடுத்த நாள்களிலேயே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்தார். அதன் பின்னர் "ஜனாதிபதி முன்னிலையில் விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவி யேற்பார்" என்று அறிவிக்கவும் செய்தார். உண்மையில் இலங்கை அரசமைப்பின் படி கட்டாயமாக ஜனாதிபதி அல்லது ஆளுநர் முன்னிலையில் தான் ஒரு முதலமைச்சர் பதவியேற்க வேண்டும் என்று சட்டமிருந்தால் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்த சந்தேகம் எழுந்திருக்காது. ஆனால் மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது பிரதம நீதி யரசர் என்போர் முன்னிலையில் கூட பதவிப்பிரமாணம் செய்து கொள்ள வசதி இருக்கும் போது, இப்படி மஹிந்தவின் காலில் அட்டாங்க நமஸ்காரம் செய்வதை மக்களால் ஜீரணிக்கமுடியவில்லை. எப்போதும் எதிர்ப் பரசியல் என்பது சாத்தியமற்றதுதான். ஆனால் தேவையற்ற விடயத்துக்கு கூட வளைவதுதான் இங்கு பிரச்சினையாகிறது. எப்போதும் நாணிக்கோணும் அரசியல் பாதை யில் தான் கூட்டமைப்பின் மாகாண அரசு செல்லப்போகிறது என்றால், ஏன் இவர்களுக்கு வாக்களித்தோம் என்ற சலிப்பே மக்களிடம் ஏற்படும். இந்தச் சலிப்பு பலமடையும் போது, இந்தமுறை வெற்றிலை கடாசப்பட்டதை விடவும் , வீடு குப்பைக்கூடைக்குள் போடப்படும் நிலை உருவாகலாம்.

இந்தக்கூத்து நடைபெறுவதற்கு முன்னரே தேர்தல் முடிவுகள் வெளிவந்த கையோடே யாருக்கு அமைச்சுப்பதவி என்பதில் போட்டா போட்டி தொடங்கிவிட்டது தேர்தலை ஒற்று மையாக எதிர்கொண்ட கூட்டமைப்பு வேட் பாளர்களை அமைச்சுப்பதவி என்னும் சூனியக்காரி ஒரே நொடியில் பிரித்து, எதிரும் புதிரும் போல ஆக்கிவிட்டாள். அமைச்சுப்பதவிக்காக பலரது பெயர்கள் முதலில் அடிபட்டன. சீ.விகே சிவஞானம், சித்தார்த்தன், சிவாஜிலிங்கம், சர்வேஸ்வரன் என்று ஆரம்பத்தில் பலமாக உலவிய தெரி வுகள் புறக்கணிக்கப்பட்டு, பெரும்பாலும் எவரும் எதிர்பாராதவர்களுக்கே அமைச்சு ஆசனங்கள் கிடைத்திருந்தன. இந்த அமைச்சு ஆசனப்பங்கீடு தொடர்பில் இந்தியாவே முக்கிய பங்கு வகித்துள்ளது. குறிப்பாக அமைச்சுப் பதவிக்காக ஆரம்பத்தில் முயன்ற சிலருக்கு இந்திய இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து கடும்அழுத்தங்கள்பிரயோகிக்கப்பட்டு,அவர்கள் அமைச்சுப்பதவிக்கான 'சங்கீதக்கதிரையில்' இருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். இறுதியி ல் இந்திய ஆசிர்வாதத்துடனேயே இறுதிப்ப ட்டியல்தயாரிக்கப்பட்டிருந்தது.இதேவேளை அமைச்சுப்பங்கீட்டில் சகல மாவட்டங்களுக்கும் சகல கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற கூட்டமைப்பின் கூற்று மீண்டுமொருமுறை காற்றில் பறக்க விடப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டம் அமைச் சுப்பகிர்வில் புறக்கணிக்கப்பட்டதாகக் கூறி, ஆர்ப்பாட்டம் கூட இடம்பெற்றது. ஆனாலும் கூட்டமைப்பின் உயர்மட்டத்தலைவர்கள் என்னதான் செய்யமுடியும்? அவர்கள் என்ன சுயபுத்தியிலா அமைச்சர்களை தெரிவு செய்தார்கள். இந்தியா கொடுக்கும் சாவியில்

18 ▶

# நம்மவர் நிகழ்வுகள்

## விக்டோரியா மாநிலத்தில்

| | |
|---|---|
| 19th Oct 2013 | Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting |
| 26th Oct 2013 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting & AGM |
| 26th Oct 2013 | Neenthi Kadantha Neruppaaru' Book Release |
| 27th Oct 2013 | Bharathy Tamil School - Senior Students Annual Concert(Thamil Maalai 2013) |
| 2nd Nov 2013 | ASoGT Tamil Competition 2013 - Prize Giving Ceremony |
| 3rd Nov 2013 | Kamban Vizha - Kamban Kazhagam |
| 3rd Nov 2013 | Malarum mottukal |
| 16th Nov 2013 | Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting |
| 23rd Nov 2013 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting |
| 27th Nov 2013 | Maveerar Remembrance Day 2013 - Tamil Co-ordinating Committee |
| 7th Dec 2013 | Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting |
| 14th Dec 2013 | Casey Tamil Mantram's Monthly Seniors Meeting |
| 14th Dec 2013 | Laughing Co Laughing 2013 -Australian Medical Aid Foundation (AMAF) Bundoora |
| 15th Dec 2013 | Laughing Co Laughing 2013 -Australian Medical Aid Foundation (AMAF) Rawville |
| 25th Dec 2013 | TRO Australia's Annual Christmas Appeal on 3CR & 24Hr IBR |
| 5th Jan 2014 | Annual Cricket tournament by JHC OBA Vic |

**VIC - Monthly Meetings**

Casey Tamil Mantram's Monthly Seniors Meeting (4th Saturday of Month)
23rd Feb, 22nd Mar, 27th April, 25th May, 29th June, 27th July, 24th Aug, 28th Sep, 26th Oct, 23rd Nov, 14th Dec
Time: 10.00 am - 2.30 pm @ Berwick Senior Citizens Hall, 112 High Street, Berwick, 3806

Tamil Senior Citizens Fellowship - Monthly Meeting (3rd Saturday of Month)
16th Mar, 20th Apr, 18th May, 15th June, 20th July, 17th Aug, 21st Sep, 19th Oct, 16th Nov, 7th Dec
Time: 11 am - 2.30 pm @ Oakleigh Hall, 142 Drummond St, Oakleigh 3166

## நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில்

| | |
|---|---|
| 12-Oct Sat | Fellowship Dinner - Consortium of Tamil Associations (NSW) |
| 19-Oct Sat | Seran's Dance Performance in Aid of Patchwork |
| 19-Oct Sat | Jaffna College Alumni Association Silver Jubilee celebrations |
| 26-Oct Sat | Kamban Vizha 1 st Day- Kamban Kazhagam |
| 26-Oct Sat | Arangadal 2013 -Jaffna University Graduates Association |
| 26-Oct Sat | Thillaana -3 - Sydney Tamil Manram |
| 26-Oct Sat | General Election -Transnational Government of Tamil Eelam ( TGTE) |
| 27-Oct Sun | Kamban Vizha 2 nd Day- Kamban Kazhagam |
| 2-Nov Sat | Tamil Cultural Event - Australian Tamil Association (ATA) |
| 9-Nov Sat | Tamil Osai Ilakkiya Vizaa |
| 21-Nov Thurs | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 22-Nov Fri | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 23-Nov Sat | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 24-Nov Sun | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 25-Nov Mon | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 26-Nov Tues | Maaveerar Vaaram 21-27 November 2013 |
| 27-Nov Wed | Maveerar Remembrance Day 2013 - Tamil Co-ordinating Committee |
| 30-Nov Sat | AGM- Eastwood Tamil Study Centre |
| 8-Dec Sun | Muththamil Maalai 2013 -Australian Medical Aid Foundation ( AMAF) |
| 14-Dec Sat | Wentworthville Tamil Study Centre- Prize giving and AGM |
| 14-Dec Sat | Annual Dinner and Presentation Night - Eastwood Tamil Study Centre |
| 25-Dec Wed | Christmas |
| 31-Dec Tues | End New Year |



ஈழமுரசு
அஞ்சல் தொடர்புகளுக்கு
Eelamurasu
P.O.Box 80
Kingsville
Vic 3012 Australia

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
emurasu@gmail.com

விளம்பர விநியோக
தொடர்புகளுக்கு
advertise@eelamurasu.com.au
0402948607

வருட சந்தா
$ 60.00
மட்டுமே

குறிப்பு
இவ்விதழில் பிரசுரிக்கப்படும்
விளம்பரங்களுக்கு அந்தந்த
விளம்பரதாரர்களே பொறுப்பு.
வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச்
செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

COMMUNITY NEWSPAPER ASSOCIATION
MEMBER
OF VICTORIA

## அறிவித்தல்

வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவரும் ஈழமுரசிற்கான உங்களது ஆக்கங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றை மேலுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

– நிர்வாகம்

# ஆசிரியர் தலையங்கம்

முரசு - 24 முழக்கம் - 300

## இணக்க அரசியலில் இளக்காரமாகிவிட்டோமா?

வடமாகாணசபைத் தேர்தலை மையமாக வைத்து தமிழர் தரப்பின் அரசியல் தலைவிதி பல மாதங்களாக ஊசலாடிக்கொண்டே இருக்கின்றது. அந்தா நடக்கப் போகிறது, இந்தா நடக்கப் போகின்றது என்று சில ஆண்டுகளின் முன்பிருந்தே சொல்லப்பட்டுக்கொண்டிருந்த இந்தத் தேர்தல் ஒருவழியாக அண்மையில் முடிந்திருக்கிறது.

ஒவ்வொரு முறையும் இத்தேர்தல் குறித்துப் பேச்செழும்போதெல்லாம் அது தொடர்பான வாதப்பிரதி வாதங்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. தேர்தல் அறிவிப்பு வெளியாக முன்பேயே அதுகுறித்துத் தமிழர் மத்தியில் தீவிரமான கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற்று வந்தன. தேர்தல் நெருங்கிய நேரத்தில் அது உச்சம்பெற்று தேர்தல் நாளில் எமது மக்களின் அரசுக்கெதிரான சூறாவளி வாக்குப் போரில் நிறைவடைந்தது.

ஆனாலும் தேர்தல் முடிந்தபின்னரும் எமது மக்களின் அரசியல் எதிர்காலம் இந்த மாகாணசபையைச் சுற்றியே சுழன்றுகொண்டிருக்கிறது. தேர்தலுக்கு முன்னரே தமிழ் அரசியற் செயற்பாட்டாளர்களாலும் புத்திஜீவிகளாலும் எச்சரிக்கையுணர்வோடு அணுகப்பட்ட இந்தத் தேர்தலும் தமிழர் பிரதிநிதிகளும் குறித்த அனுமானம் பயந்தது போன்றே தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

மக்களின் பேராதரவைத் தமக்கேற்றபடி திரித்துப் புதிது புதிதாய் விளக்கமளிப்பது, மக்களின் விருப்பமில்லாத ஒன்றை மக்களின் விருப்பமாக விளம்பரப்படுத்துவது, அமைச்சுப் பதவிக்கான போட்டிகள், குழுநிலைவாதச் சண்டைகள் என்பவற்றோடு தொடர்ந்துகொண்டிருக்கும் தேர்தல் வெற்றிக்குப்பின்னரான தமிழர் பிரதிநிதிகளின் அரசியல் இன்னுமின்னும் ஆபத்தான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறதோ என்ற அச்சம் தவிர்க்க முடியாததாகவுள்ளது.

தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக, தமிழரின் அரசியல் உரிமைப்போராட்டத்தை மாகாண சபைக்குள்ளும் பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வுக்குள்ளும் சுருக்கி, அதையே மக்களின் ஆணையாக வெளிப்படுத்தி தமிழரின் அரசியல் தலைமை கருத்து வெளிப்படுத்தியதோடு தமிழர் தலையில் விழுந்தது தேர்தலுக்குப்பின்னரான முதலாவது அடி.

முதலமைச்சர் பதவிப்பிரமாணம் செய்வது தொடர்பான விவாதத்தில் ஆளுனருக்கு விழுந்தடித்து வீறாப்போடு கருத்துக்கள் சொன்னபோது எமது மக்கள் புல்லரித்துத்தான் போனார்கள். ஆளுநரிடமோ ஜனாதிபதியிடமோ பதவிப்பிரமாணம் செய்ய வேண்டுமென்ற எந்தக்கடப்பாடுமில்லை, சாதாரண ஒரு சட்டத்தரணியிடமேகூட பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், அதிலும் குறிப்பாக சட்ட மேதைகள் வீரவசனம் பேசி மக்களை உசுப்பிவிட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் எவ்வித கடப்பாடோ சட்ட நிர்ப்பந்தமோ இல்லாமலேயே மகிந்த இராஜபக்ஸ விடம் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இதுவொரு தான்தோன்றித்தனமான செயற்பாடு என்றே எண்ணத் தோன்றுகிறது. முதலில் தமிழ்மக்கள் இதை விரும்பவில்லை. கொலை பாதக ராஜபக்ஸ முன்னிலையில் பதவிப்பிரமாணம் எடுப்பதை உணர்வுள்ள எந்தத் தமிழனும் விரும்பப் போவதில்லை. அதேநேரம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களும் உறுப்பினர்களும்கூட இதை விரும்பவில்லை. பலர் வெளிப்படையாகவே தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். அத்தோடு நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களும் இதை விரும்பவில்லை. அவர்களில் பலரும் வெளிப்படையாகவே இதை எதிர்த்துள்ளனர்.

ஆனால் இவையெல்லாவற்றையும் புறந்தள்ளி எந்தத் தேவையுமற்ற விதத்தில் மகிந்த ராஜபக்ச முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துள்ள செயலானது பலத்த ஐயத்தையும் சினத்தையுமே தமிழர் மத்தியில் எழுப்புகின்றது. இணக்க அரசியலென்பது இயலாத்தனத்தின் வெளிப்பாடாக இருக்க முடியாது. எம்மினத்தை இளக்காரமான நிலைக்குத் தள்ளுவதாக இருக்கவும் கூடாது.

ஏற்கனவே, சிங்கள அடக்குமுறையாளர்களுக்கெதிரான தமிழ்மக்களின் விடுதலைப் போரை 'கணவன் மனைவி' சண்டையாகச் சித்தரித்து உருவான சர்ச்சையைப் போலவே இந்தப் பதவிப்பிரமாண நிகழ்வும் எமது இனவிடுதலை அவாவை கேலிக்குள்ளாக்கியிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகின்றது. தமிழ்மக்களின் அரசுக்கெதிரான ஆக்ரோசமான எதிர்ப்புணர்வை தேர்தல் முடிவுகளை வைத்து உலகமே எடைபோட்டுக் கொண்டிருக்கையில் தமிழ்மக்களின் அந்தத் தீர்ப்பை நீர்த்துப் போகச்செய்யும் செயலையே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற விசனம் தமிழ்மக்களிடத்தில் எழத் தொடங்கியுள்ளது.



காலத்தையுணர்ந்து கடமையாற்றுவார்களா இவர்கள்?

ஈழமுரசு

10 October 2013

# இன்னும் அணையாத பெருநெருப்பு



தாயகத்திலிருந்து இளையபல்லவன்

இன்று ஒக்டோபர் 10. உலகப்பந்தின் பார்வைக்கு ஆச்சரியப் புள்ளிகளை நிறைத்த மறப்பெண்ணொருத்தியின் நினைவுநாள் . தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்.

வீட்டுக்குள் இருந்த பெண்ணியம் ஆயுதம் கொண்டு அடக்குமுறையாளர்களுக்கு எதிராக ஆர்ப்பரித்து கிளம்பிய நாள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதிய சகாப்தத்தை தோடக்கிவைத்த லெப். மாலதி (பேதுறுப்பிள்ளை சகாஞ்சலி) என்ற சுதந்திரபறவை வித்தாகிப்போனது இன்றுதான்.

கோப்பாய் கிறேசரடி சந்தியில் தொடங்கிய வீழ்ந்துபோன மாலதி , பின்னர் ஆயிரமாயிரம் பெண்புலிகளாக முளைதெழுந்தாள். கடற்புலி, கரும்புலி,வான்புலி, என தாயக நிலப்பரப்பெங்கும் புதுமைப் பெண்களாக நின்ற ஈழப்பெண்களுக்கு வழிகாட்டியாக எங்கும் நிறைந்திருந்தாள் மாலதி. போராளிகள் எப்போதுமே புதைக்கப்படுவதில்லை. விதைக்கப்படுகிறார்கள் .

லெப். மாலதி மன்னாரைச் சேர்ந்தவர். சிறுவயதிலேயே அடக்குமுறையாளர்களின் ஆக்கிரமிப்பைக் கண்டு கொதித்தெழுந்தவள். தமிழ்பெண்களுக்கெதிராக பாலியல் வல்லுறவு எனும் ஆயுதம் அநாயசமாக ஏவப்பட்ட போது அதைத் தமிழர்களின் துப்பாக்கிகள் தான் எதிர்கொள்ள முடியும் என நம்பினாள்.ஒருநாள் தன் இலட்சியத்தை நிறைவேற்ற பெண்புலியாகிப்போனாள்.

இந்தியப் படைகள் தாயக நிலப்பரப்பெங்கும் கால்பதித்திருந்த பொழுது "புலிப்பெடியள் எல்லாரையும் அழிச்சுப் போட்டம். இன்னும் சறம் கட்டின பொடியள் கொஞ்சபேர்தன் இருக்கிறாங்கள். அவங்களையும் முடிச்சா எல்.ரீ. ரீயின் சகாப்தம் முடிந்தது. " என இந்தியத் தூதுவர் கே.என். டிக்ஸித் கொக்கரித்து சில நாட்களே கழிந்திருந்தன. இந்திய படைகளின் வாகனங்களின் பேரிரைச்சலைக் கேட்டாலே தமிழர்களின் தூக்கம் கலைந்து விடும்.

அவ்வளவுக்கு இந்தியப் படைகளின் அடாவடித்தனங்கள் கட்டு மீறி போயிருந்தன. ஊருக்குள் புகுந்து தமிழ்ப் பெண்களை சிதைப்பது அவர்களின் வாடிக்கை.அமைதிப்படையாக வந்திருந்த இந்தியப்படைகள் அமளிப்படைகளாகி தாயக நிலங்களை ஆக்கிரமித்து தமிழர் விடுதலைப் போராட்டத்தை எட்டப்பர் குழுக்களுடன் இணைந்து நசுக்க முயன்றன.

இந்த நிலையில்தான் இந்தியபடைகளுக்கு எதிராக புலிகளின் மகளிர் படையும் போரில் குதித்தது. அப்படிப்பட்ட ஒரு நாளிலேயே கோப்பாய் கிறேசரடி சந்தியில் இந்திய ஆக்கிரப்புப்படையை துவம்சம் செய்யவென பெண்புலிகள் காத்திருந்தனர். அப்போது நேரம் அதிகாலை 1.15 . ஆளரவமற்ற அந்த இருட்டில் வெளிச் சங்களைப் பாய்ச்சியபடி பயணித்துக் கொண்டிருந்தன வாகனங்கள். அதில் இந்தியப் படைகளின் வாகனங்கள் ஏதாவது வருகின்றனவா என அவதானித்து கொண்டிருந்தாள் மாலதி.

தாக்குதலுக்கான போராளிக் குழுவின் தலைமைப் பொறுப்பை மாலதியே ஏற்றுக் கொண்டிருந்தாள். அப்போது திடீரென இருளின் அமைதியைக் கிழித்தபடி கைதடி வெளியைத் தாண்டியபடி பேரிரச்சலோடு வந்துகொண்டிருந்த இந்தியப்படையின் வாகனத் தொடரணியை அவள் கண்டு விட்டாள். மாலதியின் உத்தரவு கிடைத்த மறுகணம் பெண் புலிகளின் துப்பாக்கிகள் சடசடக்கத் தொடங்கின. சீறும் ரவைகளாலும், வெடித்துச் சிதறும் கிரனைட்டுக்களாலும் கோப்பாய்வெளி வெளிச்சக்காடானது. உக்கிர தாக்குதல் நீண்டது. தாக்குதலின் கடுமையை உணர்ந்த இந்தியப் படை ஒரு டசின் போராளிகளுக்கெதிரான நூற்றுக் கணக்கான ஜவான்களைக் களமிறக்கியது. அவ்வேளையில் எங்கிருந்தோ வந்த துப்பாக்கி ரவை ஒன்று மாலதியைத்தாக்கியது. காலில் விழுப்புண் அடைந்தாள் மாலதி. அருகில் இந்தியப் படைகள் மீது சரமாரியாக சுட்டுக்கொண்டிருந்த தன் சக போராளியான விஜியை அழைத்தாள். விஜி நான் காயப்பட்டிட்டன். அவங்கள் கன பேர் குவிஞ்சிட்டாங்கள் போல கிடக்கு. என்னட்டை இருக்கிற ஆயுதத்தை கொண்டுபோய் அண்ணையிட்டை கொடுங்கோ" என்று அந்த காயத்தின் வலியிலும் உணர்ச்சியுடன் கத்தினாள் மாலதி. அவளின் நண்பியான விஜி இராணுவத்தை முன்னேற விடாமல் கடுமையாக சுட்டுக் கொண்டிருந்தாள். காலிலிருந்து இரத்தம் கொப்பளிக்க விஜியை நோக்கி ஊர்ந்து சென்ற மாலதி "விஜி! நான் சரியாக்காயப்பட்டிட்டன். உங்களைக் கூப்பிட்டனான்.

உங்களுக்கு கேட்கேல்ல.இந்தாங்கோ என்ரை ஆயுதம்" என்று ஆயுதத்தை விஜியின் கைகளில் திணித்தாள்.

"இல்லையக்கா உங்களை மீட்டுக் கொண்டுபோறன்" எண்டு சொன்ன விஜியிடம், "அதற்கான நேரம் இல்லை. அவங்கள் கனபேர் நிற்கிறார்கள். என்ரை ஆயுதம் பத்திரம். என்னை விட்டிட்டு ஆயுதத்தை கொண்டு போங்கோ. நான் சயனைட் அடிக்கப்போகிறேன் "என்று பதிலுரைத்தாள் மாலதி. இந்தியப்படை பெண் போராளிகளை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நிமிடம் மாலதியின் கழுத்திலிருந்த சயனைட் அவளுக்கு உணவாகிறது. கோப்பாய் கிறேசரடிச் சந்தியில் தாய்மண்ணை முத்தமிட்டாள் மாலதி. அன்றுமாலதி தொடக்கி வைத்த சத்திய வேள்வியில் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் இணைந்துகொண்டனர். ஓய்வின்றி வீசிய விடுதலைப்புயலுக்கு வலுச்சேர்த்து இன்று ஆயிரக்கணக்கான பெண் மறவர்கள் தாயகக் கனவுசுமந்து கல்லறைக்களுக்குள் துயின்று கொண்டிருக்கின்றனர்.



போரில் நாங்கள் தோற்றுப்போனாலும் கூட, இந்த வீரப்பெண்களின் ஈகத்தால் தான் இன்று மாகாணசபை யைக் கைப்பற்றுமளவுக்காவது தமிழினம் தப்பிப்பிழைத்திருக்கிறது. இல்லாவிட்டால் எப்போதோ பேரினத்தின் பசிக்கு இரையாகியிருப்போம். அல்லது எங்களின் சுயங்களைத் தொலைத்துவிட்டு, நாமும் சிங்களவர்களாக மாறி, "புத்தம் சரணம் கச்சாமி" என்று விகாரைகளின் முன்னால் வழிபாடு செய்துகொண்டிருப்போம்.

இப்போது காலம் எங்களை வரலாற்றின் குப்பைத்தொட்டிக்கு அண்மையில் கடாசிவிட்டு ஓய்ந்திருக்கிறது. தன்னிகரில்லாத் தலைவன் காலத்தில் உலகே வியக்கும் போரியல் ஆற்றலோடு, தலைநிமிர்ந்து நின்றவர்கள் இன்று தோற்றுப்போனவர்களாக தலைகுனிந்து நிற்கிறோம். ஆனாலும் தலைவர் பிரபாகரன் சொன்னதைப் போல 'போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்டம் மாறிவிடவில்லை'. ஆயுதங்கள் முள்ளிவாய்க்காலோடு மௌனிக்கப்பட்டுவிட்ட போதும்,

காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்றவாறு, எம்மினத்தின் இருப்பைத் தக்கவைக்க ஜனநாயகம் என்ற உன்னதமான இன்னொரு ஆயுதத்தைக் கையில் எடுத்திருக்கிறது தமிழர் தரப்பு. இந்த ஜனநாயகம் கூட களமாடி உயிர் நீத்த எங்களின் வீரமறவர்களினதும் வீராங்கனைகளினதும் குருதியிலும், தியாகத்திலும் கட்டியெழுப்பட்டதுதான்.அவர்களின் வீரத்தின் ஆத்மபலத்தோடுதான் ஜனநாயகப்போரில் இப்போது வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த வெற்றியிலும் விடுதலைப்போராட்டத்தின் முதல் வித்தான மாலதியின் வழித்தோன்றலாய், ஒரு பெண் பங்கு கொண்டுள்ளாள். விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துரைப்பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவியான அனந்தி.

இவர் இலட்சியத்துக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு போராளியின் மனைவியாக தலைவரின் முன்பாக திருமணம் செய்து கொண்டவர். இறுதிப்போரில், என் எஞ்சியிருந்த போராளிகளை ஐ.நா முன்பாக சரணடைய வைத்தால் பின்னர் அவர்களை பத்திரமாக வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்கலாம் என்ற சர்வதேச வாக்குறுதியை நம்பி, படைகளிடம் சரணடையும் போராளிகளை அழைத்துச் சென்றவர்களில் ஒருவர் எழிலன். தன்கரங்களால் படைத்தரப்பிடம் கணவனைக் கையளித்துவிட்டு, 'என்றோ ஒருநாள் வருவார்' என்ற கனவுடன் காத்திருந்து களைத்துப்போய், கடைசியில் காணாமல் போனோரை மீட்பதற்காக களமிறங்கினார் அனந்தி.

சத்தியவான் -சாவித்திரி என்ற புராணக்கதை தமிழில் உண்டு. தன் கணவன் உயிரைக் கவர்ந்து சென்ற காலனை விடாது துரத்திச் சென்று, மீட்டவள் சாவித்திரி. இப்போது எங்கள் ஆண்களை போர் கவர்ந்து சென்றுவிட, அவர்களை மீட்கும் நவீன சாவித்திரிகளாக தமிழ்ப்பெண்கள் போராடத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களோடு இணைந்து கொண்ட அனந்தியும் எழிலனோடு காணாமல் போன இன்னும் ஆயிரம் ஆயிரம் உறவுகளைத்தேடி கண்டறிய போராடப் புகுந்தார்.

அபலைப்பெண்களின் வெற்றுகுரல்களுக்கு எந்த சக்தியும் இல்லை.அவை கவனிக்கப்படாத குரல்களாக ஒதுக்கப்பட்டனவே தவிர காணாமல் போன எவரும் மீளவேயில்லை. இந்த நிலையில்தான் மாகாணசபைத்தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் அனந்தி களமிறங்கினார். கணவனை மீட்க அரசியல் பலம் ஒன்று தேவை என்ற காரணத்துக்காகவே இந்த தேர்தலில் போட்டியிடுவதாக கூறினார்.

வாழ்வில் எத்தனையோ துன்பங்களைச் சுமந்தும், இன்னும் தன் கணவனை மீட்பதற்காக துணிச்சலுடன் குரல் கொடுக்கும் அனந்தியை தங்கள் வீட்டுப்பிள்ளையாகவே எல்லா மக்களும் எண்ணினர். தங்கள் மகளின் கண்ணீரைத்துடைக்க வாக்குகளால் வேள்வி நடத்தினர். எந்தவித அரசியல் பின்புலமோ பணபலமோ இல்லாத அனந்தி, முதலமைச்சர் வேட்பாளருக்கு அடுத்தபடியாக விருப்பு வாக்குகளைப்பெற முடிந்தது.இப்போது அரசியல் பலம் என்ற ஆயுததோடு தன் கணவரையும் இன்னும் காணாமல் போனோரையும் மீட்கும் அகிம்சைப்போரில் முன்னரை காட்டிலும் அசுர பலத்தோடு குதித்துள்ளார் அனந்தி.

"நாங்கள் நிறையவே துன்பங்களை சுமந்துவிட்டோம். இனியும் சுமக்க முடியாது. தங்கள் உறவுகளை காணாமல் போனோர் பட்டியலில் இணைத்துவிட்டு, ஒவ்வொரு பெண்ணும் படும் துன்பத்தையும் நானும் அனுபவித்தவள் என்ற வகையில் நன்கு அறிவேன். பொருளாதார அடிப்படையை தொலைத்துவிட்டு தங்கள் பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்று வழி தெரியாமல் இந்தப்பெண்கள் தவிக்கிறார்கள். காணாமல் போனோரை மீட்கும் எமது அகிம்சைப்போரைத் தொடரவுள்ள அதேசமயத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளேன். இதற்கு புலம் பெயர்தமிழர்களும் உதவுவார்கள் என்று நம்புகிறேன்" என்று சொல்கிறார் அனந்தி.

இன்னமும் உறுதியோடும், உணர்வோடும் களத்தில் நிற்கும் அனந்தி போன்ற வீரமங்கைகள், தமிழீழப்பெண்கள் தினத்தில் முதல் களப்பலியான மாலதியின் பிரதிகளாகவே கண்ணுக்குத் தெரிகிறார்கள்.

# உழைக்கும் மக்கள் தலைவனின் மறைவு




வியட்நாம் ஜெனரல் வோ-குயன்-கியாப் தனது 102-வது வயதில் இராணுவ மருத்துவமனையில் உறவினர்கள் சூழ காலமானார். ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்கா என்ற மூன்று ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வியட்நாம் மக்கள் நடத்திய நீண்ட கால போரின் இராணுவ தலைமை தளபதி ஜெனரல் வோ-குயன்-கியாப்.

1954-ம் ஆண்டு. பிரெஞ்சு காலனி ஆட்சியாளர்கள், அமெரிக்க இராணுவத்தின் துணையோடு வியட்நாம் மக்கள் மீது தொடுத்த ஆக்கிரமிப்பு போரின் 8-வது ஆண்டு. அதிகரித்து வரும் வியட்நாம் மக்கள் படையினரின் தாக்குதல்களை சமாளிக்க, பியன்-தியன்-பு என்ற இடத்தில் தனது படைகளை குவித்து




தளம் ஒன்றை உருவாக்க முயன்றன பிரெஞ்சு ஆக்கிரமிப்பு படைகள். அந்தத் தளம் தகர்க்கப்பட முடியாதது, வலுவானது என்று பிரெஞ்சு, அமெரிக்க இராணுவ நிபுணர்கள் உறுதியாக நம்பினார்கள்.

ஆனால் அந்தத் தளத்தை சுற்றியிருந்த உயரமான மலைகளில் தாக்குதல் ஆயுதங்களை எடுத்துச் சென்ற வியட்நாம் மக்கள் படைகள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பு படைகளை மண்டியிடச் செய்தன. 11,000 பிரெஞ்சுப் படையினர் சிறை பிடிக்கப்பட்டனர். இந்தோசீனாவில் ஐரோப்பிய நாடுகளின் காலனிய ஆக்கிரமிப்புகளுக்கு சவக்குழி வெட்டப்பட்டது.

ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமை விட்டுக் கொடுக்க தயாராகவில்லை. பிரெஞ்சு படைகள் துரத்தி அடிக்கப்பட்ட பிறகு 10 ஆண்டுகளுக்கு தெற்கு வியட்நாம் அரசுக்கு ஆயுதங்கள் அளித்தும், நேரடியாக அமெரிக்கப் படைகளை அனுப்பியும், வியட்நாம் மீது தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட முயற்சித்தது. உலகின் மிகப்பெரிய முதலாளித்துவ நாடு, இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் யாராலும் எதிர்கொள்ள முடியாத அமெரிக்க அரசை, நெல் வயல்கள் நிறைந்த விவசாய நாடான பலவீனமான இராணுவம் கொண்ட வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்கொண்டது.

1968-ம் ஆண்டு சயானில் உள்ள அமெரிக்க தூதரகம் உட்பட தெற்கு வியட்நாமில் உள்ள அமெரிக்க தளங்கள் பலவற்றில் ஒரே நேரத்தில் வியட்நாம் மக்கள் இராணுவமும் தெற்கு வியட்நாமின் வியட்காங் போராளிகளும் தாக்குதல் நடத்தினர். அமெரிக்கப் படைகளின் எதிர் தாக்குதலில் ஆயிரக்கணக்கான வியட்நாமியர்கள் உயிரிழந்தனர்.

இந்தப் போர் முழுவதிலும் அமெரிக்க ஆயுதங்களால் கொல்லப்பட்ட வியட்நாமியர்களின் எண்ணிக்கை 25 லட்சம், வியட்நாம் மக்கள் படையினரின் தாக்குதலில் உயிரிழந்த அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 58,000. கொல்லப்பட்ட அமெரிக்கப் படை வீரர்களின் உடல் பொதிகளையும், அமெரிக்க இராணுவம் வியட்நாம் மக்கள் மீது அவிழ்த்து விட்ட ஈவிரக்கமற்ற கொலைகளையும் தொலைக்காட்சியில் பார்த்த அமெரிக்க மக்கள் மத்தியில் அவர்களது அரசு கட்டியமைத்திருந்த பிம்பங்கள் சரிந்தன. போரை எதிர்த்து நடந்த அமெரிக்க மக்களின் போராட்டத்துக்கு அடி பணிந்தும், போரில் தோல்வி ஏற்பட்டதாலும் அமெரிக்கா வியட்நாமிலிருந்து விலகிக் கொண்டது. வியட்நாம் ஒரே நாடாக விடுதலை பெற்றது.

இந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்களின் தலைமை தளகர்த்தராக பணியாற்றிய ஜெனரல் கியாப் 1911-ம் ஆண்டில் வியட்நாமின் விவசாய குடும்பம் ஒன்றில் பிறந்தவர். இளம் வயதிலேயே புரட்சிகர நடவடிக்கைகளுக்காக பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களால் கைது செய்யப்பட்டார். பிறகு ஹனோய் பல்கலைக் கழகத்தில் அரசியல், பொருளாதாரம், மற்றும் சட்டத் துறைகளில் படித்துக் கொண்டே வரலாற்று ஆசிரியராக பணி புரிந்தார். 1939-ம் ஆண்டு ஜப்பான் வியட்நாம் மீது போர் தொடுத்த போது ஹோ-சி-மின் தலைமையிலான இந்தோசீனா கம்யூனிஸ்ட் கட்சியுடன் சீனாவுக்கு இடம் பெயர்ந்தார்.

அவரது மனைவியும், தந்தையும், சகோதரியும் பிரெஞ்சு ஆக்கிரமிப்பு அரசால் சிறையிடப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்தப்பட்ட கொரில்லா போரில் கியாப் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஜப்பானிய சரணடைவுக்குப் பிறகு 1946-ம் ஆண்டு வியட்நாம் ஜனநாயக குடியரசு அறிவிக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெற்றன.

ஆனால், வியட்நாம் மக்களின் விடுதலையை ஏற்றுக் கொள்ளாமல் தனது காலனி ஆதிக்கத்தை மீண்டும் நிலை நாட்ட வந்தது பிரெஞ்சு ஏகாதிபத்தியம். அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பிறகு அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் மீது படை எடுத்தது.

பிரெஞ்சு படைகளுக்கு எதிரான தியன் பியன் பூ தாக்குதலிலும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான டெட் தாக்குதலிலும் வியட்நாம் மக்கள் படை எப்படி வெற்றி பெற முடிந்தது?

ஒரு பொருளாதார ரீதியில் பின்தங்கிய, பலவீனமான ராணுவத்தைக் கொண்ட நாட்டு மக்கள் தம்மை ஆக்கிரமித்திருக்கும் முதலாளித்துவ பொருளாதாரத்தினால் வலுப்படுத்தப்பட்ட நவீன இராணுவத்தை எதிர்த்து எப்படி தமது சுதந்திரத்தை மீட்க முடிந்தது?

வியட்நாம் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் கோட்பாட்டை வகுத்து நடைமுறைப்படுத்தி வியட்நாம் மக்களின் விடுதலைப் போரை வழி நடத்தினார் ஜெனரல் கியாப்.

எதிரியின் இராணுவ, பொருளாதார வலிமைகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், தம்முடைய அடிப்படை உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடும் மக்களை எதிர் கொண்டு தோற்கடிக்க அது போதாது. ஒரு நாட்டின் மக்கள் தமது சுதந்திரத்துக்காக ஒன்றுபட்டு போராடும் போது அவர்கள் எப்போதும் வெற்றியடைவது உறுதி. உலகின் மிகப் பலமான பொருளாதார, இராணுவ சக்தி கூட தமது சர்வதேச உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடும் மக்களின் எதிர்ப்பை தகர்க்க முடியாது.

"அவ்வாறு ஒரு நாட்டின் மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்கள் யுத்தம் இராணுவ, அரசியல், மற்றும் பொருளாதார தளங்களில் நடத்தப்படுகிறது. எதிரிகள், ஒரு இராணுவத்தை மட்டும் எதிர் கொள்ளவில்லை, வியட்நாம் மக்கள் அனைவரையும் எதிர் கொண்டனர். யுத்தத்தின் முடிவை தீர்மானிப்பது பொருட்களும் ஆயுதங்களும் இல்லை, மக்கள்தான்" என்றார் ஜெனரல் கியாப். ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான வியட்நாம் மக்களின் போர், நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கியிருந்தது.

"போரில் வெற்றி பெற்றவர்கள் வியட்நாம் மக்கள், அமெரிக்க இராணுவம் தோற்கடிக்கப்பட்டது. வியட்நாம் மக்கள் போரை விரும்பவில்லை, அமைதியை விரும்பினார்கள். அமெரிக்க மக்கள் போரை விரும்பினார்களா? இல்லை, அவர்களும் அமைதியை விரும்பினார்கள். எனவே எங்கள் வெற்றி வியட்நாம் மக்களின் வெற்றி, அமெரிக்காவில் அமைதியை விரும்பிய மக்களின் வெற்றி." என்றார் ஜெனரல் கியாப்.

என்ன விலை கொடுத்தாவது வியட்நாமை ஆக்கிரமிக்கத் துடித்த ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள்தான் தோல்வி அடைந்தார்கள்.

உழைக்கும் மக்களின் விடுதலைக்காக ஏகாதிபத்தியங்களை எதிர்த்து போராடி மண்டியிடச் செய்த தளபதி ஜெனரல் கியாப்புக்கு சிவப்பு வணக்கங்கள்.



# MKS Spices'n Things

ஆதரவில்

# புலரும் பூபாளம் 2013



## மாபெரும் கலைத் திருவிழாவும் இராப்போசன விருந்தும்

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தின்
சிறுவர் இல்ல நிதியுதவி நிகழ்ச்சி

**வெவ்வேறு கலைஞர்களின் வித்தியாசமான பல்சுவை கலைகள்!**

**மெல்பேணின் பிரபல்யமான உணவகங்களின் அறுசுவை உண்டிப் படையல்!**

அரிய கலை நிகழ்ச்சிகளை கண்டு இரசித்திடவும்,
அறுசுவை உணவுகளை உண்டு உருசித்திடவும்,
ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவிய திருப்தியில் இலயித்திடவும்
அற்புதமானதொரு வாய்ப்பு

காலம் : 1 டிசம்பர் ஞாயிற்றுக்கிழமை 2013
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : ஸ்பிறிங்வேல் நகர மண்டபம்
அனைவரும் வருக ஆதரவு தருக
மேலதிக விபரங்களுக்கு
திரு ப. நவனீதராஜா - 0403 290 286
எஸ். ஈசானந்தன் - 0425 844 123
வீ. சுப்பிரமணியம் - 03 82881748
என்.கந்தசாமி - 0466 110 016

## Art festival and Dinner

Kilinochi Mahadeva Ashram for Kids invites you to their fund raising programme.


**Come and enjoy the different art forms by renowned artistes... and treat your taste buds to a variety of dishes from various hotels of Melbourne.**

A great opportunity to eat, enjoy and donate to your heart's content......

Date: 1st December Sunday 2013 Time : 5pm
Springvale Town Hall, Springvale VIC- 3171

Expecting your participation and kindness in donating liberally.......

For further details please contact
P. Navaneetharajah - 0403 290 286
S.Ishaanandan - 0425 844 123
V. Subramaniam - 03 82881748
N.Kandasamy -0466 110 016



# Pularum Poopaalam 2013

ஆச்சிரமத்தின் தொடர்புகளுக்கு
திரு. இராசநாயகம் தலைவர் (முன்னாள் கிளிநொச்சி அரசாங்க அதிபர்)
94 21 4923118, 94 770604950
திரு. வேலாயுதம் முகாமையாளர் 94 778042508

# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்

தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள்! ஒக்டோபர் 10. இன ஒடுக்குமுறைக்கெதிராகவும் சமூக அடக்குமுறைக்கெதிராகவும் போராடப்புறப்பட்ட தமிழீழப் பெண்களுக்கு வழிகாட்டியான வித்தொன்று வீழ்ந்தநாள். பெண்களால் இயலாதென மூலையில் முடங்கிக் கிடந்த ஒரு சமூகத்திலிருந்து வீறுடன் புறப்பட்டுவந்து விடுதலைப் போர் தொடுத்த பெண்களின் புரட்சிகர நாள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் களச்சாவடைந்த முதற் பெண்போராளியான இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி (பேதுறு சகாயசீலி) அவர்களின் நினைவுநாளே தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகும். எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் தந்திரத்தோடும் நாசகார த்திட்டத்தோடும் கால்பதித்திருந்த அந் நியப் படைகளுக்கெதிரான போரில் இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி அவர்கள் வீரச்சாவடைந்தார். இனவிடுதலை, பெண்விடுதலை, சமூகவிடுதலை என்ற கோட்பாட்டுத் தளங்களில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் ஆயிரமாயிரம் பெண்கள் பங்குகொண்டு எமது போராட்டத்தைச் செழுமைப்படுத்தினார்கள்.

எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு அளப்பரியது. ஆர்ப்பரித்துவந்த எதிரிப் படை களுக்கெதிராக எமது பெண்கள் சளைக்காது போராடினார்கள். வீரமிகு சமர்க்களங்கள் பலவற்றை எதிர்கொண்டார்கள். சாத்தியமற்றதென்று கருதப்பட்ட பல சாதனைகளைப் படைத்தார்கள். உடல்வலிமைக்கும் மனவலிமைக்கும் சவால்விடக்கூடிய பல நெருக்கடிகளைக் கடந்து சரித்திரம் படைத்தார்கள்.

இராணுவத் துறையில் மட்டுமன்றி நிர்வாகம், அரசியல் என பல பரிமாணங்களில் எமது பெண்களின் பங்களிப்பு வியக்கத்தக்கது. எவ்விதத்திலும், எவ்விடத்திலும் தாம் ஆண்களுக்குச் சளைத்தவர்களில்லை என்பதை அவர்கள் தமது செயற்றிறனால் வெளிப்படுத்தினார்கள்.

ஒப்பீட்டளவில் இயற்கையாகவே சமர்க்கள வாழ்க்கை பெண்களுக்குச் சவாலானதுதான். இருந்தாலும்கூட தமிழீழப் போரியல் வரலாற்றில் பெண்களின் பங்களிப்பென்பது வியக்கத்தவொன்றாகவே இருந்திருக்கின்றது. சகதிகளுக்குள்ளும் கட்டாந்தரைகளிலும் இவர்கள் அரணமைத்துக் காவல் காத்தார்கள், போர்புரிந்து நிலம் மீட்டார்கள். ஆட்லறி முதற்கொண்டு கனரக போர்க்கலங்கள் இயக்கி போர் புரிந்தார்கள். கடலேறி வந்த பகைவனை விரட்ட அரணின்றி களங்கண்டு கடலோடு கரைந்தார்கள்.

அடிப்படையில் எமது தமிழ்ச்சமூகக் கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளால் நிறைந்திருந்தது. உயர்வு தாழ்வு வேறுபாடுகள் அடக்குமுறையாளர்களையும், அடக்குமுறைக்குள்ளாவோரையும் ஏற்படுத்தியது. அவ்வகையில் பெண்ணடிமைத்தனமும் எமது சமூத்திலிருந்த களையாகவே அமைந்துவிட்டது.

எப்போது பிறரில் தங்கியிருப்பவளாகவே பெண்ணை எமது சமூகம் கருதிவந்தது. சுடுகாட்டுக்குப் போகக்கூடாது என்பது தொடக்கம் பல்வேறு மூடத்தனமான கட்டுப்பாடுகளை விதித்து ஓர் அடக்குமுறையை காலாகாலமாக பெண்கள் மீது ஏவிவந்தது எமது சமூகம்.

இப்படிப்பட்ட ஒரு சமூகத்திலிருந்து பெண்கள் விறாப்போடு ஒரு விடுதலைப் போரை நடாத்துவதென்பது அவ்வளவு எளிதான காரியமன்று. ஆனாலும் அதைச் சாத்தியமாக்கிக் காட்டியது எமது தமிழீழ விடுதலைப் போராட்டம்.

சமையற் கட்டிலிருந்து சண்டைக்குச் சென்ற எமது பெண்களின் வளர்ச்சி அபரிதமானது. உலகத்துக்கு முன்னோடியாகச் சொல்லப்பட வேண்டியது.



அப்படிப் போராடப் புறப்பட்டவர்களுள் ஒருத்திதான் பேதுறு சகாயசீலி என்ற இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி.

இந்தியப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்கும் முகமாக கோப்பாய் வெளியில் காவல் காத்துக்கிடந்த புலியணியில் ஒருத்தியாக மாலதியும் காத்திருந்தாள்.

அப்போது நேரம் 1.15. கோப்பாய் கிறேசரடியில் நின்ற மகளிர் அணி வீதியில் போய்வரும் ஊர்திகள் யாருடையவை என அவதானித்தவாறு தாக்குதலுக்குத் தயாராக நிற்க, அதில் ஒருவராக தனது எம்- 16 ஐ அணைத்துப்பிடித்தபடி மாலதியும் நிற்கின்றாள்.

வானம் கரிய இருளைச் சொரிந்து கொண்டிருக்க, குவியல் குவியலாகச் சிந்திக்கிடந்தன நட்சத்திரப் பூக்கள். இடையிடையே வீதியால் போய்வரும் ஊர்திகளின் ஒளிகள் வானத்தை நோக்கி நீண்ட ஒளிக் கோடுகளை வரைய, ஒவ்வொன்றையும் அவதானித்தபடி நிற்கிறாள் மாலதி.

அப்பால் கைதடி நோக்கி விரிந்திருந்த வெளிகளினூடாக ஊடுருவிய கண்கள், இப்பால் கோப்பாய்ச் சந்தி கடந்து மிக வேக மாக வந்து கொண்டிருந்த ஊர்தியை நோக்கித் திரும்பின. மிக அண்மையில் வந்து விட்ட ஊர்தியிலிருந்து குதித்த இராணுவம் இவர்களிருந்த பகுதி நோக்கிச் சுடத்தொடங்கியது. அந்த இடத்தில் இந்திய இராணுவத்தை நோக்கிச் சுழன்ற முதலாவது சுடகலனும் மாலதியினுடையதுதான். கோப்பாய்- கைதடி வெளியில் எழுந்த சூட்டுச் சத்தங்கள் எங்கள் சரித்திரத்தில் புதிய அத்தியாயத்தை எழுதத் தொடங்கின.

சண்டை கடுமையாகத்தான் நடந்தது. சீறும் ரவைகளின் ஒலியும், அவற்றின் ஒளிர்வும் தாக்குதலின் கடுமையைப் பறைசாற்றின. மாலதி இராணுவத்தினருக்கு மிக அண்மையில் நின்று தாக்குதலைச் செய்து கொண்டிருந்தார். திடீரெனக் காலில் காயமுற்ற மாலதியின் குரல் வேட்டொலிகளையும் மீறி ஒலித்தது.

“நான் காயப்பட்டிட்டன். என்ர ஆயுதத்தைப் பிடியுங்கோ. என்ர ஆயதத்தைக் கொண்டு போய் அண்ணையிட்டைக் குடுங்கோ”

காயமுற்ற பின்னும் சுட்டுக் கொண்டிருந்தவர் இராணுவம் அதிகமாக நிற்பதைப் புரிந்து கொண்டார். தான் வீரச்சாவடைந்தாலுங்கூட, தான் நேசித்த ஆயுதம் எதிரியிடம் விடுபட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில், தன்னைப் பார்க்காமல் ஆயுதத்தைக் கொண்டு போகும் படி கூரிக் கொண்டிருந்தார். அவரை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற வேகத்துடன் ஊர்ந்து சென்ற விஜியிடம்,

‘என்ர ஆயுதம் பத்திரம். என்னை விட்டிட்டு ஆயதத்தைக் கொண்டுபோ”

எனச் சொல்லி ஆயுதத்தைக் கொடுத்தவர், கழுத்திலிருந்த நஞ்சையருந்தி மண்ணை முத்தமிட்டார்.

மாலதி ஒரு சகாப்தம். தமிழீழ விடுத லைப் போரில் முதற் களப்பலியான பெண்புலி மாலதிதான். மாலதியின் வீரச்சாவு எமது சமூகத்திற் புரையோடிப்போயிருந்த ஒரு புற்றுநோய்க்கு எச்சரிக்கை மணியடித்தது.

எமது இனவிடுதலையென்பது சகல அடக்குமுறைகளும் நீங்கிய ஒரு சமதர்ம சமூகக் கட்டமைப்பைக் கட்டியெழுப்புதலே என்ற இலட்சியத்தோடுதான் எமது தேசியத்தலைவர் அவர்கள் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார். பெண்ணடிமை நீக்கம்பெறாத எந்த விடுதலையும் முழுமையான சமூக விடுதலையன்று என்பது நிதர்சனமான உண்மை.

அவ்வகையில் பெண்ணடிமைத்தனத்தை இயலுமானவரை ஒழிக்க தமிழீழப் போராட்டம் பலவழிகளின் முயன்றது. பெண்களின் எழுச்சியைத் தக்கவைக்கவும் பெண்ணடிமைத்தனத்துக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ச்சியாகப் பேணவும் ‘பெண்கள் எழுச்சி நாள்’ தேசியத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதற்களப்பலியான பெண்புலி மாலதியின் நினைவுநாளையே தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாக நினைவுகொள்கின்றோம்.

எமது மக்கள் மீதான ஒடுக்குமுறையில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் குழந்தைகளுமே. போர் நிகழ்ந்து கொண்டிருந்த வேளையிலும்சரி, தற்போதைய சூழ்நிலையிலும்சரி, எமது பெண்கள் அனுபவித்த, அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பங்கள் சொற்களால் விவரிக்க முடியாதவை.

இன்று வகைதொகையின்றி, எவ்விதப் பதிவுகளுமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் பெண்களின் நிலை வெளித்தெரியாமலேயே திட்டமிட்டு மறைக்கப்படுகின்றது. தமிழீழ மண் முழுமையாக இராணுவமயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் முற்றிலும் இராணுவத்தால் புடைசூழ வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் கொடுமைகள் முழுமையாக வெளியே வராதவண்ணம் தடுக்கப்படுகின்றன.

எமது இனத்தின் விடுதலைக்காக பன்னாட்டு மட்டத்தில் மேலும் முனைப்பாகப் போராட வேண்டிய காலமிது. மிகக் கொடூரமாக ஒடுக்கப்பட்டிருக்கும் எமது பெண்களின் அவலநிலையை உலகிற்கு வெளிப்படுத்தி நீதி கேட்கும் நேரமிது.

பன்னாட்டுப் பெண்கள் அமைப்புக்களுடனும் மனிதவுரிமை அமைப்புக்களுடனும் கைகோர்த்து எமக்கான நீதியைப் பெறும் போராட்டத்தை நாம் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். தமிழீழப் பெண்களுக்கெதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை உலகின் முன் வெளிப்படுத்தி எமக்கான நீதியைப் பெறவேண்டும்.

இரண்டாம் லெப். மாலதியும் அவள் வழிசென்று களமாடி வீழ்ந்த மாவீரர்களதும் கனவுகள் இன்னமும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன. என்றோ ஒருநாள் அவை நனவாகுமென்ற நம்பிக்கையோட நாம் தொடர்ந்தும் எமது விடுதலைப் பயணத்தைத் தொடர வேண்டும்.

# தலைவரின் வீடு

# இதயத்தின் இருப்பிடம் சரிவு



## தாயகத்திலிருந்த வில்லங்கன்

போர் நிறுத்தக்காலத்தில் வன்னிக்கு சென்றவர்கள் அங்கு மற்றெல்லா இடங்களையும் விட புதுக்குடியிருப்பில் சில அசாதாரண அனுபவங்களைச் சந்தித்திருக்கக் கூடும். வன்னியின் ஏனைய இடங்களைவிட புதுக்குடியிருப்பை மையப்படுத்திய பிராந்தியத்தில் புலிகளின் கண்காணிப்பு நடைமுறைகள் ஒப்பீட்டளவில் இறுக்கமாக இருந்ததை உணர்ந்திப்பார்கள்.

புலிகளுக்குத் தெரியாமல் ஓர் அணுகூட அசையமுடியாது என்ற நிலைமையே இப்பகுதியில் காணப்பட்டது. இத்தகைய கடுமையான கண்காணிப்புகளுக்கான காரணம், மக்கள் என்ற போர்வையில் ஆழ ஊடுருவும் படையணியைச் சேர்ந்தவர்களோ அல்லது அரச உளவாளிகளோ வேவு பார்க்க வரக்கூடும் என்ற முன்னெச்சரிக்கைதான்.

வன்னியின் ஏனைய இடங்களை விடவும் புதுக்குடியிருப்பு சார்ந்த இடங்களில் தமது கண்காணிப்பை இவ்வளவு இறுக்கமாகப் புலிகள் ஏன் நடைமுறைப்படுத்துகிறார்கள் ? என்ற கேள்வி அப்போது எல்லோர் மனங்களிலும் எழவே செய்தது.ஆனால் அதற்கான காரணமும் அவர்களுக்கு வெளிப்படையானதுதான். புலிகளுக்கு மட்டுமல்லாது, தமிழர் களுக்கே இதயமான தலைவர் பிரபாகரன் புதுக்குடியிருப்பை அண்டிய பகுதியிலேயே வசிக்கிறார் என்பதுதான் அந்தக் காரணம்.

தலைவர் புதுக்குடியிருப்பில் இருக்கிறார் என்று தெரிந்தாலும் கூட, எந்த இடத்தில், எந்த வீட்டில் இருக்கிறார் என்பது அவரது வீடு படையினரால் கைப்பற்றப்படும் வரை அரச படைகளுக்கோ, பொதுமக்களுக்கோ தெரியவரவேயில்லை. அவ்வளவு ஏன், மிக முக்கியமான தளபதிகள், தலைவரின் பாதுகாப்பு பிரிவி னர் என்போரைத் தவிர மற்றைய போராளிகளுக்கு கூட தலை வரின் இருப்பிடம் குறித்து எதுவும் தெரிந்திருக்கவில்லை.

பழைய மந்திரதந்திரக் கதைகளில் வருவது போன்று ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி செல்லவேண்டிய ஒரு இடம் போலவே, தலைவரின் இருப்பிடம் குறித்த தகவலின் இரகசிய-மும் பேணப்பட்டது. இப்படி பார்ப்பதற்கு அரிதான தலைவரின் இருப்பிடம் குறித்து பல்வேறுவிதமான ஊகங்கள் மக்கள் மத்தி யில் இருந்தன.

அடர்ந்த காட்டுக்குள், நிலத்துக்கு கீழே, ஏராளமான சுரங் கங்களைக் கொண்ட இடத்திலேயே அவர் இருப்பார் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்கள் நினைத்ததில் அதி-கம் உண்மையிருந்தது என்பதையே, கடைசியில் அவரது வீட்டைப்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தபோது, அவர்கள் உறு திப்படுத்திக் கொண்டார்கள்.

> **"வெறும் கட்டடங்களைத் தகர்ப்பதால் மக்கள் மனத்திலிருந்து அந்த எழுச்சி வடிவத்தைக் கலைத்துவிட முடியாது. மாவீரர் துயிலுமில்லங்களைச் சிதைப்ப தன் மூலமோ நினைவுத் தூபிகளை இடிப்பதன் மூலமோ தலைவரின் வீட்டைத் தகர்ப்பதன் மூலமோ தனது கோபத்தையும் வெறியையும் சிங்களப் பேரினவாதம் தணித்துக் கொள்ளலாமேயொழிய, தமிழ் மக்களின் மனங்களில் இந்த எழுச்சிச் சின்னங்களின் நினைவுக ளையோ விடுதலைக்கான அவாவையோ அழித்துவிட முடியாது"**




ஓரளவு சனநடமாட்டம் குறைந்த இடத்தில், தலைவரின் வீடு அமைந்திருந்தது. வீட்டைச்சுற்றிலும் காவலரண்கள். அவை வெளிப்பார்வைக்கு காவலரண்கள் போல தோற்ற மளிப்பதை தவிர்ப்பதற்காக மல்லிகை போன்ற கொடிவகை களைப் படரவிட்டு உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்தோடு ஒவ்வொரு காவலரணும் 'இரும்புக்கேடர்களால்' கவசமிடப்பட்டிருந்தன.

ஏனைய வீடுகளைபோலவே முன்பக்கம் மல்லிகைப்பந்தலின் கீழ் 'போர்ட்டிகோ' அமைப்போடு அமைதியாகத் தெரிந்த அந்த வீடு, உள்ளே தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் மத்தியரேகையாக இருந்தது. வழமையாக ஒரு பொதுமக னின் வீட்டின் அமைப்பை முதல் தளம் கொண்டிருந்தது. படை யினரால் பச்சிளம் பாலகன் என்றும் பாராமல், பிஸ்கட்டை உண்ணக்கொடுத்துவிட்டு சுட்டுக்கொல்லப்பட்ட தலைவரின் இளையமகன் பாலச்சந்திரனின் விளையாட்டு இடம் இந்த முதல் தளம்தான். அவனின் விளையாட்டுப் பொருள்கள் சில அண்மையில் இந்த வீட்டைப்பார்வையிட படையினர் அனுமதித்திருந்த காலத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

முதல் தளத்தின் மையத்தில் கீழ்நோக்கி வளைந்து வளைந்து செல்லும் படிக்கட்டுக்களில் இறங்கினால் நீங்கள் இன்னொரு உலகத்துக்குச் சென்றது போல உணரவேண்டியிருக்கும். இருளும் குளிரும் கலந்த சீதோஷ்ண நிலையில், இரண்டு தளங்கள் நிலத்தின் கீழ் இருந்தன. தளபதிகளுடனான சந்திப்பு, தாக்குதல் திட்டமிடல், கரும்புலிகளுடனான சந் திப்பும் இராப்போசனமும் என்பனவெல்லாம் இந்த நிலக்கீழ் தளங்களிலேயே நடைபெற்றிருந்தன. அதனால் ஒருதாக்குதல் குறித்த திட்டமிடல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, அந்தவீட்டை விமானங்கள் அதிசக்திவாய்ந்த குண்டைவீசி தகர்க்க முனைந்தாலும் கூட, உள்ளே இருப்பவர்களுக்கு எந்த சேதமும் ஏற்படாது.

ஆயினும், கிளிநொச்சியில், கிபிர் தாக்குதலில் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வீரச்சாவடைந்த பின்னர், தலைவரின் வீட்டிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ஏனெனில் தமிழ்ச்செல்வன் விமானத்தாக்குதலில் இருந்து தப்பிக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் கொண்ட பதுங்குகுழியில் இருந்த போதும், அந்தப்பதுங்கு குழியின் இருபக்க வாசல்களையும் குறிவைத்து தாக்கி,அதனை மூட செய்து, உடலில் எந்தவொரு காயமுமின்றி, மூச்செடுக்க முடியாமாலேயே தமிழ்ச்செல்வனை அரசபடைகள் கொன்றிருந்தன.

எனவே அவ்வாறான நிலையைத் தவிர்க்க, காற்று நிலக்கீழ் தளங்களுக்கு தாராளமாக வரக்கூடிய வகையில் பல வழிகள் உண்டாக்கப்பட்டன. அத்தோடு அவசரகாலத்தில் வெளியேறுவதற்கான சுரங்க வழிகள், 'லிப்ட்' வசதிகள் என்பன வும் உண்டாக்கப்பட்டிருந்தன.

இப்படியெல்லாம் ஒரு கோட்டைக்கு நிகரான வலுவோடு அமைதியாக இருந்த அந்த வீட்டை விட்டு வெளியேற கடைசிவரை தலைவர் சம்மதிக்கவில்லை. ஆனால் உலககூட்டுச் சதியால் பேரினவாத சிங்களப்படை முன்னேறிக் கொண்டேயிருந்தது. தலைவர் வராமல் புலிகள் எப்படிப் போவார்கள்? புதுக்குடியிருப்பை படைகள் கைப்பற்றினாலும் தலைவரின் இருப்பிடத்தை அவர்களால் உடனடியா கக் கண்டுபிடிக்க முடியாதுதான். ஆயினும் எவ்வளவு நாட்களுக்குத்தான் எதிரியின் கட்டுப்பாட்டில் வந்துவிட்ட பகுதி யில் இருக்கமுடியும்? போரை வழி நடத்துவது யார்?

இந்த நிலையில் தான் , புலிகளின் வரலாற்றில் நடைபெற்றிராத




ஒரு மாபெரும் முறியடிப்புச்சமரை நடத்தி படைகளை பழைய நிலைகளுக்கு விரட்ட தளபதிகள் முடிவெடுத்தார்கள். தன்னைக்காக்க வேண்டும் என்ற ஓர்மத்தில் புலிகள் இன்னும் மூர்க்கமாக போரில் இறங்கி தாய்மண்ணை விடுவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் அந்தவீட்டில் இருந்து வெளியேற மாட்டேன் என்று அடம்பிடித்தார் என்று போராளிகள் கூறுகிறார்கள்.

புலிகளின் சகல படையணிகளும், ஆயுதபலமும் ஒன்றி ணைக்கப்பட்டு தளபதிகள் தலைமையில் புலிகள் பாயத்தயார். அந்தப்பாய்ச்சல் மட்டும் நினைத்தபடி நடந்திருந்தால், தாயகத்தின் தலைவிதி வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனால் இங்கும் துரோகம் விளையாடியது. எப்படியோ படைத்தரப்புக்கு புலிகளின் திட்டம் கசிந்துவிட்டது. இரவோ-டிரவாக ஆயிரக்கணக்கான படைகள் நாலைந்து வரிசையில் புலிகளைச் சூழ 'பெட்டி" அடித்து விட்டார்கள்.

அப்படியும் சோரவில்லை வீரப்புலிகள். வெறிகொண்டு பாய்ந்தார்கள். எல்லா வரிசைகளும் தகர்ந்து போக, தேசத்தை மீட்பதற்கான ஓயாத அலைகளாக புறப்பட எத்தனித்த சமயத்தில் தான் போரியல் மரபுக்கு முரணாக பொஸ்பரஸ் குண்டுகளை வகைதொகையாக ஏவியது பேரினப்படை. பாயத்துணிந்த







# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம்





















# நீந்திக்கடந்த நெருப்பாறு

**ஒரு அறிமுகம்**

ஈழவிடுதலைப்போராட்டம் பற்றிய படைப்புக்கள் அந்த மண்ணிலிருந்து பிறப்பெடுக்கும்போதே உயிர்ப்பானதாகின்றது. தற்போதைய நெருக்கடியான சூழலில் அப்படியான ஆக்கங்களை பிரசவித்தல் சாத்தியமானதல்ல. ஆனாலும் தனது வாழும் காலத்திலேயே படைத்துவிடவேண்டும் என விரும்பிய வன்னியின் மூத்தபடைப்பாளியின் உயிர்த்துடிப்பே "நீந்திக்கடந்த நெருப்பாறு" நாவல்.

முள்ளிக்குளத்திலிருந்து முள்ளிவாய்க்கால் வரை நாம் ஒரு பெரும் நெருப்பாற்றை கடந்தோம். இது வீரமும் தியாகமும் நிறைந்த ஒரு விடுதலை வரலாற்றின் ஒரு பகுதி. அந்த வீரமும் அர்ப்பணிப்பும் நிறைந்த விடுதலை வரலாற்றின் ஒரு துளியை களமுனை அனுபவங்களுடன் நெருங்கி உறவாடிய ஒரு மூத்த படைப்பாளி ஊடாக கொண்டுவருவதாக வெளியீட்டாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி சனிக்கிழமை சிட்னியில் தமிழ் லீடர் குழுமத்தினரால் இந்நாவல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. அதனைத்தொடர்ந்து ஏனைய நாடுகளில் வெளியிடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

போரும் வாழ்வும் இணைந்த வன்னிவாழ்வினை மனக்கண்முன் கொண்டுவரும் கதையோட்டமும் உயிர்த்துடிப்பான உரையாடல்களும் இப்படைப்பை முழுமைப்படுத்துகின்றன.

ஒரு உயர்ந்த இலட்சத்தியதுக்கான பயணத்தின் போது தோன்றிய காதல்கூட அந்த இலட்சியங்களுக்குச் சேவை செய்யும் ஒரு ஆயுதமாக மிளிர்வதை உணர்ந்த போது ஏதோ ஒரு விதமான பெருமை அவளின் நெஞ்சை நிறைத்தது. என்று உணர்வின் உந்துதலும்

"எங்கையப்பு போனனீ? சிவத்தைச் சண்டையிலை விட்டிட்டு என்ன நேரம் எது நடக்குமோ எண்டு கலங்கிக் கொண்டு நிக்கிறம். உன்னையும் காணேல்லயெண்டால் என்ன பாடுபடுவம் எண்டு உனக்கு விளங்காதே?" என்று பதைபதைப்பும்

"கலியாணம் எங்கடை காதலின்ரை தேவை! போராடுறது எங்கடை நாட்டுக்கு செய்யவேண்டிய தேவை. ஒண்டுக்காக ஒண்டை விட்டுக்குடுக்க ஏலாது"என்று வீரமும்

"ஓ.. ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தி மூண்டிலை எங்கடை குடும்பம் மலையகத்திலையிருந்து இடம்பெயர்ந்தது. அப்ப சிங்களக் காடையர் சித்தப்பாவை வெட்டிக் கொண்டுபோட்டாங்கள். பிறகு வவுனியாவில இருக்கேக்க நான் பிறந்தன். அங்கையிருந்து பிறகு இடம்பெயர்ந்து பூவரசங்குளம் வந்தம். அடுத்த இடப்பெயர்விலை மடு வந்தம். மடுவலிலை அண்ணாவைப் பறிகுடுத்தம். பிறகு தட்சினாமடு. அங்கை கிளைமோரிலை அண்ணான்ரை பிள்ளை செத்தது. இப்ப இது.. இப்பிடியே எங்கடை வாழ்க்கை சாவும் இடப்பெயர்வுமாய் போச்சுது"என்று இடம்பெயர்வாழ்வும்

"பொறுங்கோ உங்டை கோபம் நியாயமானது. ஆனால் நாங்கள் விடுதலைப் போராளியள், எதிரியளெண்டாலும் செத்துப்போனால் இராணுவ மரியாதையோடை அடக்கம் செய்யிறது தான் எங்கடை பண்பு.. நாங்கள் அவங்களைப் போலை நடக்க ஏலாது! நீங்கள் செய்தது மாதிரி ஒரு போராளி செய்திருந்தால் கடுமையான தண்டனை கிடைச்சிருக்கும். நீங்கள் ஒரு பொதுமகன் எண்ட படியால் விடுறம்"என்று போராளிகளின் பண்பையும்

தலைவர் சொன்னது போலவே படகில் போயிறங்கிய அவர்களின் அணி பரவைக்கடல் தாண்டி, சேறும்சகதியும்கடந்து, இராணுவத்தை உடைத்து உட்புகுந்து, இரு பக்கங்களிலும் விமானக் குண்டு வீச்சுக்களுடனும் கனரக வாகனங்கள், ஆயுதங்களுடனும் அலை அலையாய் வந்த இராணுவத்தினருடன் சமராடி ஆனையிறவு முகாமைக் கைப்பற்றி பெரும் வெற்றியுடன் போராளிகள் தரையால் நடந்து வந்து ஆனையிறவில் கொடியேற்றினர். அந்த சக்தி மிக்க வார்த்தைகள் நினைவுக்கு வந்த போது தலைவரில் இருந்து ஒரு ஆத்ம ஒளி தன்னில் பாய்வது போல் அவன் உணர்ந்தான். என்று போராளிகளின் துடிப்புகளையும் என விதையாய்ப்போன மக்களினதும் மாவீரர்களினதும் உணர்வின் நாதமாக படைக் கப்பட்டுள்ளது இந்நாவல்.

டால்ஸ்டாயின் போரின் அமைதியும் என்ற நாவல் இரஸ்ய மக்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தை நீந்திக்கடந்த நெருப்பாறு ஈழ மக்களிடையே நிச்சயம் ஏற்படுத்தும் என்கிறார் தமிழருவி மணியன் அவர்கள். நிலத்தின் அடியில் ஓடும் நீரோட்டம் போன்று சோகம் செறிந்த இந்தப்படைப்பு முழுவதும் சுந்தரம் - முத்தம்மாள் கணேசு - ரூபா என்ற இரண்டு காதல் ஜோடிகளின் ஆன்மாவை ஊடுருவி அன்பு செலுத்தும் கண்ணீர்க்காதல் இழையோடி நம்விழிகளை ஈரமாக்குகின்றது என்கிறார் அவர்.

நூலுக்கு அணிந்துரை வழங்கிய திராவிடர் கழகத்தலைவர் வீரமணி அவர்கள்




இந்நாவலில் வரும் பரமசிவனும் பார்வதியும் சிவமும் முருகரும் சுந்தரும் முத்தம்மாவும் கணேசும் ஷரூபாவும் மலையவனும் வதனியும் பகத்சிங்கும் மங்களாவும் கற்பனைக் கதைமாந்தர்கள் அல்ல. அவர்களின் பெயர்கள் மாறியிருக்கலாம். ஆனால் அவர்கள் வீரர்களாகவும் வீராங்கனைகளாகவும் அப்படிப்பட்டோரை உருவாக்கியவர்களாகவும் நம்மோடு வாழ்ந்தவர்களே என்கிறார்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ அவர்களும் வரலாற்று ஆய்வாளர் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களும் இப்படைப்புக்கு தமது ஆசியுரைகளை வழங்கியுள்ளனர்.

ஈழத்து இலக்கியப்பரப்பில் இப்படைப்பு முதன்மையான இடத்தை பெறுவதுடன் குரலடங்கிய மக்களின்ர் உணர்வாக ஒலிக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.





# வடக்கு வெற்றியும் கிழக்கு தீர்மானமும்

## நெருக்கடியில் இலங்கை

வடக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 கைப்பற்றி சரித்திர வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளதால் அரசுக்கு நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ளன. தமிழர்களின் ஒரே பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசாமல் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது என்ற உண்மை தெட்டத்தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசித் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள் என்று உலக நாடுகள் இலங்கை அரசை வலியுறுத்தி வருவது சரியான நிலைப்பாடு என நிறுவப்பட்டிருக்கிறது.

வடமாகாண ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே கைப்பற்றுவார்கள் என்பது அரசுக்குத் தெரியாததல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியைக் குறைப்பதும், தமக்கான வாக்குகளை அதிகரிப்பதுமே அரசின் நோக்கமாக இருந்தது. வடமாகாணத் தமிழர்கள் அத்தகைய ஒரு வாய்ப்பை அரசுக்குக் கொடுக்காமலே விட்டுவிட்டார்கள்.

### அரசை அடக்கிய தமிழர்கள்

பலமான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை வடபகுதி மக்கள் அரசுக்குக் கொடுத்திருப்பார்களேயானால் முள்ளிவாய்க்கால் வெற்றித்தினத்தைக் கொண்டாடுவதுபோல் இன்னொரு வெற்றித் தினமாகவே இதுவும் கொண்டாடப்பட்டிருக்கும்.

தமிழர்களின் வாக்குகள் அரசுக்கு கணிசமாக இருந்திருப்பின் ஜெனிவாவில் இலங்கை மீதான இறுக்கம் தளஉவு கண்டிருக்கும். முள்ளிவாய்க்காலில் அவலங்கள் எதுவும் இடம்பெறவில்லை, அங்கு நிகழ்ந்தவையெல்லாம் நீதியான மக்கள் மீட்பு நடவடிக்கையே எனச் சொல்லும் திறனை அரசு பெற்றிருக்கும். தமிழர்கள் அரசியல் ரீதியான தீர்வை வேண்டி நிற்கவில்லை: அதற்காகப் போராட்டமும் நடத்தவில்லை: தந்தை செல்வாவும் அண்ணன் பிரபாகரனும் தமிழர்களைப் பிழையான வழியில் இழுத்துச்செல்ல முயன்றிருக்கிறார்கள்: இப்போது தமிழர்கள் உணர்ந்து அந்தப் பிடியிலிருந்து விடுதலையாகிவிட்டார்கள் என்று பிதற்ற அரசுக்கு வாய்ப்பிருந்திருக்கும்.

### உணஉத்தப்பட்ட உண்மை

ஆனால் தேர்தல் முடிவுகள்மூலம் இப்படி எதனையும் கூறமுடியாமல் அரசு தனித்துவிடப்பட்டிருக்கிறது. தமிழர்கள் வேறு, இலங்கை அரசு வேறு என்ற உண்மை உணர்த்தப்பட்டிருக்கிறது.

வட மாகாணசபை உத்தியோக பூர்வமாக இயங்கத் தொடங்க முன்னரேயே பயமுறுத்தல்கள், சட்டவியாக்கியானங்கள், எச்சரிக்கைகள் என்பவையெல்லாம் அரச தரப்பிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஊகத்தின் அடிப்படையில் வடமாகாணசபையின் செயற்பாடுகளால் நிகழக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கான எச்சரிக்கைகளும் விடப்பட்டு வருகின்றன.

### தென் இலங்கையிலும் நந்திக்கடலா?

தென்னிலங்கைவரை நந்திக்கடலை இழுத்துவரத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முயல்கிறார்கள் என்றும் விதண்டாவாதம் பேசப்படுகிறது. மொத்தத்தில் வடமாகாணசபை அரசுக்குப் பணிந்து நடக்காவிட்டால் தமிழர்களுக்கு இன்னொரு பேரவலம் காத்திருக்கிறது என்ற தொனியில் தென்னிலங்கை இனவாதிகள் பேசி வருகிறார்கள்.

அரசு இவற்றைக் கண்டுகொள்வதாக இல்லை. கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் அரச ஆதரவாளர்களுக்கு எப்படியும் பேசலாம் என்பதற்கான அனுமதியை அரசே வழங்கியிருப்பதுபோல் தெரிகிறது. பொதுபலசேனா, இராவண பலய போன்ற இனவாத அமைப்புகளும் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ போன்ற கடைகெட்ட அமைச்சர்களும் பச்சையாகவே இனவாதத்தைக் கக்கி வடமாகாணசபைத் தெரிவில் தங்களுக்கு இருக்கும் வெறுப்பையும் கையாலாகாத் தன்மையையும் வெளிப்படுத்தி வருகிறார்கள். அரசின் சிந்தனைக்கும் போக்குக்கும் இவர்கள் குரலாக இருந்து வருகிறார்கள். இவை அரச தரப்பின் பலவீனமான அடையாளங்களாகவே தென்படுகின்றன.

### ஜெனிவாவில் சிக்கல்

அரசுக்குச் சர்வதேச சூழ்நிலை இன்ய நிலையில் சிறப்பாக இல்லை. ஜெனிவாவில் சிக்கல்கள் அதிகரித்திருக்கின்றன. அமெரிக்காவினதும் இந்தியாவினதும் கருத்துகள் இலங்கை அரசை சங்கடத்துக்குள்ளாக்கி வருகின்றன. ஐ.நா. செயலர் பான் கீ மூன் கூட ஐ.நா இலங்கை விடயத்தில் தோற்றுப்போய்விட்டது எனக்கூறிய வார்த்தைகள் ஆழமானவை மாத்திரமல்ல ஆபத்தானவையுங்கூட என்பதை அரசு புரிந்துகொள்ளாமல் இருக்க முடியாது. நவநீதம்பிள்ளை இலங்கை அரசுக்கு விதித்த காலக்கெடுவும் ஆரோக்கியத்துக்கான அறிகுறியல்ல.

### நிலமை பாரதூரம்

இவற்றால் அரசு துவண்டுபோய் இருக்கிறது. உலகமன்றம் சிறிய நாடுகளைக் கொடுமைப்படுத்துகின்றது, அவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியே பேசும் அளவுக்கு நிலைமை பாரதூரமாக இருக்கிறது. வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸூம் ஐ.நா. மன்றத்தின் கருத்துகளால் மனமுடைந்து போய் இருக்கின்றார் என்பது அவரது பாய்ச்சல் மூலம் தெரிகிறது.

ஐ.நாவின் இரண்டு தீர்மானங்களை நாங்கள் ஏற்கனவே உதாசீனம் செய்துவிட்டோம், இப்போது நவநீதம்பிள்ளையால் மார்ச் மாதம் வரையிலான காலக்கெடு விதிக்கப்பட்டிருக்கிறது. இதனையும் நாம் கண்டுகொள்ளப் போவதில்லை, எங்கள் விருப்பப்படிதான் எங்கள் நடவடிக்கைகள் அமையும் என்ற தொனியில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக அமுனுகம தன் பங்குக்கு அறிக்கை விட்டிருக்கிறார்.

### ஐ.நா. துன்புறுத்தலா?

எனினும் அரசு அலட்டிக்கொள்ளும் அளவுக்கு ஐ.நா. சபையால் இலங்கை துன்புறுத்தப்படவில்லை. தமிழர்கள் மீதான துன்புறுத்தல்களுக்கு நியாயம் வழங்குவதற்கான ஆலோசனைகளையே அது முன்வைத்திருக்கிறது. எனினும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் 25 ஆவது மனித உரிமைகள் மாநாடு இலங்கைக்குக் கடுமையானதாக அமையும் என எதிர்பார்க்கலாம். இலங்கை அரசு நிறைவேற்றத் தவறிய பொறுப்புகளை ஐ.நா. சபை கையிலெடுத்துக்கொள்ளவுள்ளது என்ற அறிவிப்பும் கவனிக்கத்தக்கது.

### அதிகாரம் வழங்க மறுப்பு

இந்த நிலையில் வடபகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி அரசுக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்திலுள்ள அதி காரங்களைக் கேட்க விரும்பாத மாகாணசபைகளுடன் ஆட்சி செய்த அரசு தனது சிந்தனைகளுக்கு முரணாகச் செயல்படவல்ல மாகாணசபையாக வடமாகாண சபை யைப் பார்க்கிறது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் என மாகாணசபைகளுக்குச் சட்டரீதியாக வழங்கப்படவேண்டிய அதிகாரங்களை தன்வசமே வைத்திருந்த அரசு வடமாகாணத்தில் தமிழஉகள் கேட்கிறார்கள் என்ற காரணத்துக்காக அவற்றை வழங்க மனமில்லாமல் தவிக்கிறது.

வடமாகாணசபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பேற்கும் முன்னரே காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான சிக்கல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பெரிதாகப் பேசப்பட்டன. அவ்வதிகாரங்களை ஒரு மாகாணசபை பெறுவதன் மூலம் அதனைப் பிரிவினைக்கான அத்திவாரமாகப் பயன்படுத்த முடியும் என்றெல்லாம் விளக்கங்கள் கூறப்பட்டன.

### தமிழர் பலம் உடைபதில் என்றுமே அரசு தீவிரம்

ஏற்கனவே தமிழர்களின் பலம் உடைக்கப்பட வேண்டும் என்பதற்காக இணைந்திருந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிப்பதற்கான வாய்ப்பைப் பெற்று அதனை அரசு பயன்படுத்திக்கொண்டது. இப்போது மாகாணசபைக்குட்பட்ட காணி சம்பந்தமான அதிகாரம் மத்திய அரசிடமே இருக்கிறது என்றவாறான ஒரு நீதிமன்றத் தீர்ப்பையும் பெற்றிருக்கிறது. இதன் மூலம் மாகாணசபைக்கு காணி அதிகாரம் கிடையவே கிடையாது என்று சாதிக்கவும் முயல்கிறது.

### அதிகாரம் வழங்கத் தயங்காதீர்

தமிழ்த் தேசியக்கூட்டமைப்போ நீதிமன்றத் தீர்ப்புக்குத் தமது கோரிக்கை முரண்பட்டதல்ல, மாகாணசபைகள் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களைத் தருவதற்கு அரசு தயங்கக்கூடாது, அவ்வாறு அரசு தயங்கினால் அவ்வதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள சர்வதேச உதவியைப் பெறவும் தயங்கமாட்டோம் என்ற வகையில் பதிலளித்துள்ளது.

### கிழக்கு தீர்மானமும் அரசின் இக்கட்டும்

இந்நிலையில் இந்த வாரம் கிழக்கு மாகாணசபையும், மாகாணசபைகள் சட்டத்தில் சொல்லப்பட்ட அதிகாரங்கள் முழுமையாகவே வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு தீஉமானத்தை நிவேற்றியிருப்பது அரசை இக்கட்டான நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. தனது கட்சி ஆட்சியும், தனது கைப்பொம்மையான முதலமைச்சரின் நிஉவாகமும் நடைபெறுகின்ற கிழக்கு மாகாணசபை இத்தகைய ஒரு தீஉமானத்தை நிறைவேற்றும் என்பது அரசால் எதிர்பார்க்கப்படாத ஒன்று.

வடக்கின் தைரியமான போராட்டத்துக்குக் கிழக்கும் துணை நிற்கலாம் என்ற அச்சம் அரசை நிலைகுலைய வைத்திருக்கிறது. இதற்கு எதிர் நடவடிக்கையாக அரசு என்ன செய்யப்போகிறது என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்தியாவின் அழுத்தம்

எவ்வாறாயினும், அரசு தனது வறட்டுப் பிடிவாதத்தை தளர்த்த வேண்டும்

18 ▶

# படைகளின் பசிக்கு ஆகாரமாகும் அகதிகள்!

## டுபாயில் அந்தரிக்கும் 12 ஈழத்தமிழர்களின் நிலை!!



இலங்கையில் 2008 காலப்பகுதியில் போர் மேகம் சூழ்ந்து, சிங்களப்படைகள், உலக ஆதரவுடன் தமிழர்களின் ஆத்ம சக்தியை அழிக்க, கங்கணம் கட்டி வந்து தமிழர்நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டி ருக்கும் போது, தமது கொலைக்களங்கள், உலகத்தின் பார்வைக்கு வந்து விடக்கூடாது என்பதற்காக, தமிழர் பகுதிகளில் பணியில் ஈடுபட்டு வந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தையும், அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றியது சிங்கள அரசு.

மக்கள் அவர்களின் வெளியேற்றத்தைத் தடுத்து, அங்கேயே தொடர்ந்து இருந்து தமக்கு இழைக்கப்படும் அநியாயங்களை உலகுக்கு எடுத்துச் சொல்லுமாறும், ஏதி லிகளான தம்மைக் காப்பாற்றுமாறும், கெஞ்சி, சிறியோர் முதல் முதியோர் வரை ஆர்ப்பாட்டம் செய்தபோதும், அவர்களது எண் ணங்களுக்கு மதிப்புக்கொடுக்காது, எந்த விதப் பதிலும் அளிக்காது சிங்கள அரசின் கட்டளைக்கு அடிபணிந்து, ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் உட்பட அனைத்து அரசசார்பற்ற அமைப்புக்களும் வெளியேறி, கொழும்பில் நிலைகொண்டிருந்தன.

இந்த அமைப்புக்களின் வெளியேற்றம் சிங்கள அரசின் செய்தித் தணிக்கைகளும், இராணுவத்தினரின் வெற்றிகரமான அழிப்பு நடவடிக்கைகளும், சிங்கள அரச இயந்திரத் துக்கும், அதைச் சூழ்ந்த மக்களுக்கும், கண்மண் தெரியாத அளவுக்கு, அனை வரையும் எதிர்த்து நிற்கும் துணி வைக் கொடுத்திருந்தது.

வன்னியில் நடக்கும் கொடுமை யைப்பற்றி பத்திரிகையில் செய்தி வந் தால், எழுதியவர்கள் உள்நாட்டுப் பத்திரிகை யாளரெனில் அநாதைப் பிணமாக தெரு வோரங்களில் கிடந்தார்கள், அல்லது இனந் தெரியாத நபர்களால் கடத் தப்பட்டு காணா மல் போனார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக் கான பேச்சாளராக இருந்த, அவுஸ்திரேலி யாவைச் சேர்ந்த கோடன் வைஸ் என்ப வர், முதன் முறையாக 40,000 அப்பாவித் தமிழர்கள், சிங்களப் படைகளால் அநியா யமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என ஒரு செய்தி வெளியிட்டபோது, சிங்கள அரசு, அவர் மீது கோபம் கொண்டு அப்படிச் செய்தி வெளியிட்டதானது, இலங்கையின் இறை யாண்மைக்கு கேடு விளைவித்ததாகப் பழி சுமத்தி, அவரை 24 மணி நேரத்தில் நாட்டை விட்டே வெளியேற்றியது.

இவ்வாறே தனது அராஜகங்களையும், அட்டூழியங்களையும் செய்து, வைத்திய சாலைகள் மீதும், பொதுமக்கள் மீதும், விமானங்களால் குண்டு போட்டும், எறிகணை வீச்சுக்களை நடாத்தியும் அப்பாவி மக்களைக் கொன்று, சர்வதேசச் சட்டங்களை மீறியது.

சர்வதேசத்தினால் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள், இரசாயன ஆயு தங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி, மனிதாபிமானமற்ற முறையில் மக்களைக் கொன்று அகோரத் தாண்டவமாடியது.

வெள்ளைக் கொடியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியுடன் சரணடைய வந்த புலிகளின் அரசியல் தலைவர்களை, அந்த இடத்திலேயே சுட்டுக்கொன்று வெள்ளைக் கொடிக்கும் சமாதானத்திற்கும் களங்கத்தை ஏற்படுத்தியது.

போர் முடிந்து சரணடைந்த போராளிகளை நிர்வாணமாக்கி, கை கால் கண்கள் கட்டப்பட்ட நிலையில், அனைவரையும் சுட்டுக் கொன்று சர்வதேசப் போர்ச் சட்டங் களையே மீறியது.

போர் நடந்த பகுதிகளிலிருந்து வெளி யேறிய மக்கள் அனைவரையும், உடைகள் களைந்து பரிசோதனை என்ற பெயரில் அவர்களது அந்தரங்கங்களைத் தொட்டு அநியாயம் செய்து மனித கௌரவத்துக்கே இழுக்கேற்படுத்தியது.

3 லட்சத்திற்கும் மேற்பட்ட தமது சொந்த நாட்டு மக்களையே முட்கம்பி வேலைக்குள் அடைத்து வைத்து தம் மார்பு தட்டி வெற்றி முரசு கொட்டி ஆர்ப்பரித்தது.

போர் முடிந்ததாகக் கூறப்பட்டு 4 வருடங்கள் கடந்த நிலையிலும் தமி ழர் பிரதேசங்களில் எந்நேரமும் ஆயுதம் தரித்த படையினரை முழத்துக்கு முழம் நிறுத்தபிவைத்து மக்களை வதைத்துக் கொண்டிருக்கிறது சிங்கள அரசு.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டி ருந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்கள் இதுவரை ஒரு வரி கூட பேசவில்லை. சிங்கள அரசைக் கண்டிக்கவில்லை ஏன் என்று கேட்கவில்லை.

ஆனாலும், தற்போது கடைசிப்போரில் இறந்த அப்பாவிப் பொதுமக்கள் 40000 பேருக்கும் அதிகம் என்று அண்மையில் குறிப்பிட்டு ஐக்கியநாடுகள் சபை அறிக்கை ஒன்று வெளியிட்டிருந்தது.

கடந்த மாதம் கடைசிப்பகுதியில் ஐக்கிய நாடுகள் பணியகத்தில் நடந்த அனைத்துலகத் தலைவர்களின் ஒன்று கூடலில், இலங்கை ஜனாதிபதி முன்னிலையில், இலங்கையில் நடந்த கடைசிப் போரில் ஐக்கியநாடுகள் சபை தனது பணியைச் சரியாகச் செய்வதில் தோல்வி அடைந்துவிட்டதாகக் கூறி தமது பிழையை ஒப்புக்கொண்டுள்ளார்.

இவரது காலம் கடந்த ஞானம், இறந்து போன மக்களது உயிர்களைத் திருப்பிக் கொண்டுவருமா என்றால் இல்லை. ஆனால் அவரது தற்போதைய ஞானம் எஞ்சியிருக்கும் மக்களையாவது காப்பற்றும் என்றால், அது பயனுள்ள ஞானமாக இருக்கும்.

தற்போது, உலகமெங்கும் தமிழர்கள் அகதி களாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அந்த நாடுகளின் சட்டங்களுக்கேற்ப ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் சாசனத்தின் கீழ் அகதிக ளாக அங்கீகரிக்கப்பட்ட நிலையிலும் அடாவடி யாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். பலர் குடியேற்ற நாடுகளில் குடியமர்த் தப்படுவதற்காக, வருடக்கணக்கில் காத்திருக் கின்றார்கள்.

மலேசியா, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளில் பல ஆயிரக் கணக்கானோர், ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் நிறுவனத்தில் தமது விவரங்களை பதிந்துவிட்டு, வேறு நாடுகளில் குடியேற்றப்படுவதற்காக காத்திருக் கின்றார்கள்.

இவ்வாறு தாயகத்தைவிட்டு வெளியேறி தஞ்சம்கோரி படகில் சென்று தற்போது டுபா யில் அந்தரித்துக்கிடக்கும் ஈழத்தமிழர்கள் விடயத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் காண்பிக்கும் கண்மூடித்தனமான போக்கானது மிகுந்த மனித உரிமை ஆர் வலர்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் 46 ஈழத்தமிழர்கள் அவுஸ்ரே லியாவை நோக்கி படகில் வந்துகொண் டிருந்தபோது, அவர்களது படகில் ஏற்பட்ட பழுது காரணமாக நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில், அவ்வழியால் வந்த சிங்கப்பூரைச் சேர்ந்த கப்பல் ஒன்று, அவர்களைக் காப்பாற்றி, போகும் வழியில் அருகில் இருந்த டுபாயைச் சேர்ந்த ஜபார் அலி எனும் துறைமுகத்தில் இறக்கிவிட்டுச் சென்றது.



ஐக்கிநாடுகளுக்கான அகதிகள் நிறுவ னம், அவர்களைப் பரிசீலித்து அதில் 27 பேரை அமெரிக்கா, சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளில் குடியேற்றியிருந்தது. 6 பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். ஒருவர் நாடற்றவராக உள்ளார்.

மீதி 12 பேர் கிட்டத்தட்ட 2 வருடங்களாக, டுபாய் துறைமுகத்திலுள்ள அலுமினி யம் தொழிற்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஐக் கிய நாடுகளின் அகதிகள் சாசனத்தின் கீழ் அகதிக- ளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையிலும், வேறு நாடுகள் அவர்களை தமது நாடுகளில் மீள் குடியேற்ற மறுத்துள்ளனர்.

அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப் பப்பட்டால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து உள்ளது என்பது தெரிந்தும் அவர்கள் அனைவ ரையும் நாட்டுக்குத் திரும்பிச் செல்லுமாறு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் பணித்துள்ளது.

இந்தக் குழுவினரில் ரதிமோகன் லோ கினி என்பவர், ஒரு தமிழ் ஊடகவியலாளர் என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலும், இவர் போன்ற பல பத்திரிகையாளர்கள் இலங்கையில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டும், காணாமல் போயுள்ளபோதும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நிறுவனம், அவருக்கு இலங்கையில் பாதுகாப்பில்லை என்று தெரிந்தும், அவரை நாடு திரும்புமாறு கேட்பதானது, அவர்களுக்கு தமிழர்கள் மீது, அவர்கள் கொண்டுள்ள அக்கறையாற்ற விட்டேந்தித்தனத்தையே காட்டி நிற்கின்றது.

தாயகத்தில் ஊடகவியலாளராக பணியாற்றி இறுதிநேரப்போரின் பின்னர் சிறிலங்கா படை யினரால் கைது செய்யப்பட்டு கொடூரமாக பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டு படு- கொலை செய்யப்பட்ட இசைப்பிரியாவின் புகைப்படங்கள் உலகத்தின் மனசாட்சியை உலுப்பி எடுத்துள்ளநிலையில் –

இசைப்பிரியாவை போன்ற இன்னொரு பெண் ஊடகவியலாளரை அதே சிங்களப் படைகளின் கொடுங்கோல் ஆட்சி நடைபெறும் தேசமொன்றுக்கு பலவந்தமாக அனுப்புவதற்கு முயற்சிப்பது என்பது படுமுட்டாள்தனமான முடிவாகவே அமையும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் எச்சரித்துள்ளார்கள்.

அதே போன்று அவுஸ்ரேலியாவிலும் 40க்கும் மேற்பட்ட அகதிகள், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் சாசனத்தின் கீழ், அகதிக- ளாக அங்கீகரிக்கப்பட்ட நிலையிலும், நாட்டின் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி அவர்களை அங்கு குடியேற்ற மறுத்து 4 வருடங்களுக்கு மேலாக காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் பாரிய எதிப்புக்குரல்களுக்கு மத்தியில், இலங்கை விஜயத்தினை மேற் கொண்ட ஐக்கிய நாடுகளுக்கான மனித உரி மைகள் ஆணையாளர் திருமதி

18 ▶

ஈழமுரசு

10 October 2013

# மத்திய மாகாணத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் 14 ஆக அதிகரிப்பு

நடந்து முடிந்துள்ள 3 மாகாணத் தேர் தல்களிலும் வடக்கு மக்கள் வரலாற்றுச் சரித்திரம் படைத்தது ஒருபக்கம் இருக்க, மத்திய மாகாண சபையில் கண்டி, நுவ- ரெலியா, மாத்தளை ஆகிய மூன்று மாவட் டங்களிலிருந்தும் இம்முறை 14 தமிழ் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை அதிகரித்து மலை யகமும் சரித்திரம் படைத்துள்ளது.

இதில் குறிப்பாக கண்டி மாவட்டத்தில் இம்முறை தமிழ்ப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், மாத்தளை மாவட் டத்திலும் தமிழரொருவர் முதற்றடவையாக வெற்றிபெற்றுள்ளார். அதிகப்படியான தமி ழ்ப் பிரதிநிதிகள் தெரிவின் மூலம் கடந்த முறை எட்டாக இருந்த தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை இம்முறை 14 ஆக உயவுந்துள்ளது.

கண்டிக்கான 58 மொத்த ஆசனங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 11 ஆசனங்களும், ஐக்கிய தேசியக்கட்சி 2 ஆச னங்களும் மலையக மக்கள் முன்னணி 1 ஆசனமும், முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆச னமும் பெற்றுள்ளது. 14 ஆசனங்களை மலை யகத் தமிழர்கள் பெற்றுள்ளார்கள். மலை யகத் தமிழர்களுக்கு இது மாபெரும் வெற்றி.

### முஸ்லிம் பிரதிநிதித்துவ வீழ்ச்சி

இதேவேளை, மூன்று மாகாண சபைத் தேர்தல்களிலும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதித்துவம் குறைவடைந்துள்ளது. கண்டியில் ஏற்கனவே 6 முஸ்லிம் உறுப் பினர்கள் இருந்து வந்துள்ள நிலையில் இம்முறை 2 உறுப்பினர்கள் மட்டுமே வெற்றியடைந்து 4 உறுப்பினர்கள் தோல்வி யடைந்துள்ளார்கள்.

3 மாகாணத் தேவதல்களிலும் முஸ் லிம் காங்கிரஸ் 4 ஆசனங்களை மட் டுமே கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் நாங்கள்தான் முஸ்லிம்களின் ஏகபிரதி நிதி எனக் கூறிவரும் மு.கா. இன்று கிழக்கு மாகா- ணம் தவிஉந்த ஏனைய பகுதிகளில் தங்கள் பலத்தை நிலைநாட்ட முடியாமல் திணறுகி றது.

### கண்டியில் மு.கா. தோல்வி

மு.கா. தலைவர் ஹக்கீமின் மாவட்டமான கண்டி மாவட்டத்தில் மு.கா 11,137 வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளது. மத்திய மாகாணம் முழுவதும் இருந்து மு.கா. 17,788 வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளது. இது மு.காவுக்கு மிக வும் மட்டமான வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

ஆனால், கண்டி மாவட்டத்தில் கண் டிக்கு அறிமுகமில்லாத கொழும்பை பிறப்பி டமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திடீரென்று கண்டிக்குத் தேர்தலுக்காக களமிறக்கப்பட்ட அசாத் சாலி 55,396 வாக்குகள் பெற்றுள்ளார்.

### வடக்கில் மயிரிழையில் தப்பிய மு.கா.

வடக்கில் மன்னார் மாவட்டத்தில் முஸ் லிம் காங்கிரஸ் 4571 வாக்குகள் பெற்று 67 வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு ஆசனம் கிடைத்துள்ளது. வட மாகாணம் முழுவதும் மு.கா. 6,761 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. இது மிகவும் அடிமட்ட வீழ்ச்சியாகும். கடந்த காலங்களில் மு.கா. சார்பாக தனியான ஒரு எம்.பியை வெற்றி கண்ட மாவட்டத்தில் மு.காவுக்கு கிடைத்த வாக்குகளைப் பார்த்தால் அது படு வீழ்ச்சியே.

67 வாக்குகள் மு.காவுக்குக் கிடைக்க வில்லையென்றால் மு.கா. வடக்கில் துடைத்து வீசப்பட்டிருக்கும்.

### வடமேல் மாகாணத்திலும் அதேநிலைதான்

புத்தளம் மாவட்டத்தில் மு.கா. 10,730 வாக்குகள் பெற்று ஒரு ஆசனத்தை மட்டுமே பெற்றுள்ளது. புத்தளத்திலும் மு.கா. தப்பிப் பிழைத்து ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் 17,130 வாக்குகள் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளது. வடமேல் மாகாணத்தில் மு.கா. 27,8 60 வாக்குகள் பெற்று 2 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது. வடமேல் மாகாணத்தில் மு.கா. தனியாக களம் இறங்கியதால் அங்கு முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் தோற்க டிக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

### வியூகம் வகுக்கத் தவறிய மு.கா.

ஆனால் மு.கா. சரியான வியூகத்தை வகுத்துச் செயல்பட்டிருக்குமேயானால் மத்திய மாகாணத்தல் குறைந்தது 3 ஆசனங்களையும் வடமேல் மாகாணத்தில் 4 ஆசனங்களையும் பெற்றிருக்க முடியும் என்று மு.கா. பிரமுகர்களே சொல்கின்றார்கள்.

அதேபோன்று வடக்கில் மு.கா கூட்ட மைப்புடன் வட மாகாணத் தேர் தல் கூட்டணியொன்றை ஏற்படுத்தி கூட்ட மைப்புடன் களம் இறங்கியிருந்தால் மு.கா. 3 ஆசனங்களின் வெற்றியுடன் கூட்டமைப்பின் போனஸ் ஆசனம் ஒன்றையும் பெற்று 4 ஆசனங்களுடன் கூட்டமைப்பின் மாகாண அமைச்சுப் பதவி ஒன்றையும் பெற்றிருக்க லாம்.

வடக்கில் கூட்டமைப்புடன் மு.கா. கூட்டுச்சேர்வது என்பது காலத்தின் கட்டாயத் தேவை. இந்தத் தேவையை வட மாகாண முஸ்லிம்களுக்காக மு.கா. செய்திருக்க வேண்டும். ஆனால், மு.கா செய்யவில்லை. கிழக்கிலும் முஸ்லிம் காங்கிரஸ் மக்க ளுக்காக அரசியல் செய்யவில்லை வடக்கிலும் மக்களுக்காக மு.கா. அரசியல் செய்யவில்லை என்பதை இந்த மாகாணத் தேர்தலின்போது காணக் கூடியதாகவுள்ளது.





### வடக்குத் தமிழஉகளின் தீஉப்பு முஸ்லிம்களுக்கு படிப்பினை

வட மாகாண முஸ்லிம் மக்கள் எப்போதும் தமிழ் மக்களுடன் இணைந்த இணக்க அரசியலில் ஈடுபட வேண்டும். வட பகுதி தமிழ் மக்களின் தீர்ப்பு தற்போது ஏனைய முஸ்லிம் மக்களுக்கும் ஒரு பாடமாகவும் படிப்பினையாகவும் இருக்க வேண் டும்.

வடக்கைப் பொறுத்தமட்டில் அங்கு பெரும் பான்மை பலம் கொண்டவர்கள் தமிழர்கள். அந்தத் தமிழர்களுடன் இணைந்துதான் முஸ்லிம்கள் தங்களது உரிமைகளைப் பெறலாமே தவிர ஒரு முஸ்லிம் ஆசனத்தை வைத்துக்கொண்டு வீரம் பேசுவதும் வீறாப்பு பேசுவதும் விளலுக்கு இறைத்த நீர் போன்றாகி விடும்.

### பறிபோன பத்து பிரதிநிதித்துவம்

மத்திய மகாணத்தில் கண்டியில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் முஸ்லிம் வாக்குகளும், மாத்தளை மாவட்டத்தில் 38 ஆயிரம் முஸ்லிம் வாக்குகளும், நுவ- ரெலியா மாவட்டத்தில் 25 ஆயிரம் முஸ்லிம் வாக்குகளும் உள்ளன. இவ்வளவு முஸ்லிம் வாக்குகள் இருந்தும் கண்டி மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பாக 2 உறுப்பினஉகளும் மு.கா. சார்பாக 3,273 வாக்குகள் மட்டும் பெற்று ஒரு உறுப்பினருமாக 3 முஸ்லிம் உறுப்பினர்களே வெற்றியடைந்துள்ளார்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் அரசு சார்பாக 11 சிங்கள உறுப்பினர்களும், ஐ.தே.க. சார்பாக 4 சிங்கள உறுப்பினர்களும் வெற்றி யடைந்துள்ளர்கள். நுவரெலியா மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் உறுப்பினா் கூட எந்தக் கட்சியில் இருந்தும் வெற்றியடையவில்லை. மாத்தளை மாவட்டத்தில் அரசு சார்பாக 7 சிங்கள உறுப்பினஉகளும் ஐ.தே. க. சார்பாக 3 சிங்கள உறுப்பினர்களும் வெற்றியடைந்துள்ளார்கள். ஆனால் எந்தக் கட்சியிலும் இருந்தும் ஒரு முஸ்லிம் உறுப்பினராவது வெற்றியடைய முடியவில்லை.

### ஐ.தே.கவின் மானம் காத்தா அஸாத் ஸாலி

கண்டி மாவட்டத்தில் அரசு சார்பாக 16 உறுப்பினர்கள் வெற்றியடைந்துள்ளார்கள். ஆனால் இந்த 16 சிங்கள உறுப்பினர்களில் ஒரு முஸ்லிம் கூட வெற்றி பெற முடியவில்லை. ஐ.தே.க. சார்பாக 2 உறுப்பினர்கள் மட் டுமே வெற்றியடைந்துள்ளார்கள். இந்த 2 உறுப்பினர்களும் முஸ்லிம்கள்தான். மு.கா. சார்பாக 3,273 வாக்குகள் மட்டும் பெற்று மயிரிழையில் தப்பிப் பிழைத்து ஒரு ஆசனத்தை மட்டும் பெற்றுள்ளது. கண்டியில் ஐ.தே.க.வின் மானம் அஸாத் ஸாலியால் காப்பாற்றப்பட்டுள்ளது. அசாத் சாலி கண்டியில் போட்டியிடவில்லையென்றால் ஐ.தே.கவின் மானம் கண்டியில் மலையேறியிருக்கும்.

### மலையகத்தவர் சரித்திரம்

கண்டிக்கான 58 மொத்த ஆசனங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 11 ஆச னங்களும், ஐ.தே.க. 2 ஆசனங்களும் மலையக மக்கள் முன்னணி 1 ஆசனமும், மு.கா ஒரு ஆசனமும் பெற்றுள்ளது. 14 ஆச னங்களை மலையகத் தமிழர்கள் பெற் றுள்ளார்கள். மலையக வரலாற்றில் முதன் முதலாக மலையகத் தமிழர்கள் அரசியல் வெற்றியை அடைந்துள்ளார்கள்.

### மலையகத் தமிழரிடமும் முஸ்லிம்களுக்கு பாடம்

மலையகத் தமிழ் மக்களிடம் மத்திய, வடமேல் மாகாண முஸ்லிம் மக்கள் நல்ல பாடமும் படிப்பினையும் கற்றுக்கொள்ள வேண்டும். அதேபோன்று வடக்குத் தமிழ் மக்களிடம் கிழக்கு முஸ்லிம்கள் அரசியல் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் மலையக அரசியல்வாதிகளிடம் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியல் கற்றுக் கொள்ள வேண்டும்.

### முஸ்லிம்களின்றி ஆட்சியமைக்கலாம்

மத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணத்தில் முஸ்லிம்கள் இல்லாது முஸ்லிம்களின் ஆதரவுகள் இல்லாது முஸ் லிம்களின் வாக்குகள் இல்லாது அரசினால் ஆட்சியமைக்கலாம் என்ற செய்தியொன்று சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்க ளுக்கும் இந்தத் தேர்தல் மூலமாகச் சொல்லப்பட்டுள்ளது.

### ஒற்றுமைப்படாத முஸ்லிம் சமூகம்

மத்திய மாகாணத்தில் ஒன்றுமையில்லாத ரங்கா எம்.பியுடன் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் களம் இறங்க முடியுமானால் பெரும் சக்தி கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் வட பகுதி முஸ்லிம்களுக்காக மு.கா. ஏன் கூட்டுச் சேர முடியாது. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் நன்மை கருதி வாக்களித்த கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்காக ஏன் கூட்டமைப்புடன் கூட்டுச்சேர முடியாது.

### பொது பல சேனாவின் நோக்கம் நிறைவேறியது

அண்மைக் காலங்களாக பொதுப்பலசேனா முஸ்லிம்களையும் சிங்கள மக்களையும் பிரிக்க வேண்டும் என்ற பெரும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. அந்த ஆசை முற்று முழுதாக நிறைவேறியுள்ளது. இரண்டு மாகாணங்களிலும் இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளிலும் ஒரு முஸ்லி மாவது வெற்றி பெற முடியவில்லை.

எனவே, பொதுவாக வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள், தமிழ்க் கூட்டமைப்புடன் இணக்க அரசியல் செய்ய வேண்டும். ஏனைய பகுதி முஸ்லிம்கள் அரசுடன்தான் இணைந்து இணக்க அரசியல் நடத்த வேண்டும். அதுதான் இன்ய காலத்திற்குப் பொருத்தமான முஸ்லிம்களின் தெரிவாக அமைய வேண்டும். அது காலத்தின் அவ சியத் தேவை.

### முஸ்லிம்கள் உரிமைக் குரலாக வட மாகாணசபை இயங்கும்

நாடு முழுவதும் முஸ்லிம்களின் பள் ளிவாசல்கள் உடைக்கப்பட்டபோது முஸ் லிம்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல்கொடுத்தவர் கூட்டமைப்புத் தலை வர் சம்பந்தன் மற்றும் ரணில் விக்கிர மசிங்க. அப்போது முஸ்லிம் அரசியல் வாதிகள் குறுக்கிட்டு பள்ளிவாசல்கள் உடைக்கப்படவில்லையென்று குறுக்கிட்டார் கள். சம்பந்தனையும், ரணிலையும் தொடாந்து பேசவிடாது குழப்பத்தை ஏற்படுத் தினார்கள்.

முஸ்லிம்களுக்கான குரல் ஒலிக்கும் மா- காணமாகவும், முழு நாட்டு முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் மா- காணமாகவும் வட மாகாண சபையும் வட மாகாண முதலமைச்சஉ விக்னேஸ்வரனும் இருக்கப்போகின்றார்கள். 9 மாகாணங்களி லும் ஒரேயொரு மாகாணமாக வட மாகா ணம் மட்டும்தான் முஸ்லிம்களின் குரலா க இருக்கப் போகின்றது. மேற்கு தெற்கில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு அநீதிகள் ஏற்படுகின்ற போது வட மாகாண சபையில் கண்டனம் எதிரொலிக்கும். கண்டனப் பிரே- ரணைகள் நிவேற்றப்படும். ஆக மொத்தத்தில் வட மாகாணம் என்பது வட பகுதி தமிழ் மக்களை மட்டும் மையப்படுத்தவில்லை. முழு நாட்டுச் சிறுபான்மை மக்களையும் பாதுகாக்க வந்த எழுச்சியாகும்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் தமிழ்க் கூட்டமைப்புடன் இணக்க அரசியல் நடத்தக்கூடிய முஸ்லிம் அணியொன்றின் அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகிறது. அந்த அணியாக இன்று கூட்டமைப்புடன் இணக்க அரசியலுக்கு காத்தான்குடி நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் இணைந்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில், முழு நாட்டு முஸ்லிம் களுக்கும் மலையகத் தமிழர்களுக்காகவும் வட மாகாணம் குரல் கொடுக்கும் என்பது உறுதி.



# இந்திய நயவஞ்சகத்துக்கு பலியான பன்னிரு மறவர்கள்

மெல்ல மெல்ல துள்ளிக் கொண்டிருந்த வங்கக் கடலின் சிற்றலைகள் மீது 'கடற் புறா" சீறிக்கொண்டு செல்கிறது. குமரப்பா, புலேந்திரன் உட்படப் பன்னிரு வேங்கைகளைச் சுமந்து செல்லும் பெருமையில் கடற்புறா கடல் நீரை நுரை நுரையாகப் பின் தள்ளிக் கொண்டு இந்தியக் கரையை நோக்கிப் பறந்தது.

ஓங்கி அலையடித்து ஆர்ப்பரிக்கும் வங்கக் கடல் நிகழப் போகும் சோகத்தை நினைத்தோ என்னவோ கடற்புறாவை மெல்ல வருடியவாறு வழிவிட்டுக் கொடுக்கிறது.

ஓங்கி அலையடித்து ஆர்ப்பரிக்கும் வங்கக் கடல் நிகழப்போகும் சோகத்தை நினைத்தோ என்னவோ கடற்புறாவை மெல்ல வருடியவாறு வழிவிட்டுக் கொடுக்கிறது.

அது எத்தனையோ விடுதலைப் புலிகளைச் சுமந்து சென்று கரை சேர்ந்திருக்கிறது. போரா- ளிகளை நெருங்கவரும் கடற்படையினரைப் புலிகள் துவம்சம் செய்து வீர சாதனைகள் நிலை நாட்டிய போதெல்லாம் அலையெழும்பி ஆரவாரித்திருக்கிறது.

முதல் மாவீரன் லெப். சங்கரை உயி ராபத்தான நிலையிலும் அந்தக் கடல்தானே மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா கொண்டு சென்றது.

அது போர் நிறுத்த காலம்! எனவே புலி வீரர்கள் பாதுகாப்புக்கென ஆயுதங்களைக் கொண்டு வருவதில்லை. வழமையான எச்சரிக்கை பற்றிய அக்கறையும் கொள்ள வில்லை.

சற்றுத்தூரத்தில் மூன்று கடற்படைப்படகுகள் தெரிகின்றன.

அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. அவைகள் தமது வழியில் போய்விடும் என நம்பினர்.

போர் நிறுத்தம் அமுலில் இருந்த நேரம் அது!

ஆனால் அவை கடற்புறாவைச் சுற்றி வளைக்கின்றன! அவர்களின் துப்பாக்கிகள் உயர்கின்றன. அவர்களிடமிருந்து கைகளை மேலே தூக்கும்படி கட்டளை பிறக்கிறது.

கடற்படையினர் அவர்களைக் கைது செய்ய முயல்கின்றனர். போர் நிறுத்தம் பற்றிக் கூறுகின்றனர்.

கடற்படைப் பொறுப்பாளர் தங்களுடன் வரும் படியும் தாங்கள் அவர்களை இந்தியப் படை யிடம் ஒப்படைப்பதாகவும் கூறுகின்றான்.

போர் நிறுத்தகாலம்!

புலிகள் போர் நிறுத்தத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டு வரக்கூடாது! எனவே மூன்று புறமும் கடற்படைப் படகுகள் சூழ கடற்புறா பலா லி நோக்கிப் பயணிக்கிறது.

பன்னிருவரும் பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்படுகின்றனர்.

உடனடியாகவே விடுதலைப்புலிகளின் பிர தித்தலைவர் பலாலி முகாமிலுள்ள இந்தியப் படைத்தளபதியிடம் விரைகிறார். அவன் தனக்கு அதிகாரம் இல்லையெனக் கூறி இந் தியத் தூதர் டிக்சிற் அவர்களுடன் தொடர்பு கொள்கிறான்.

அவர் உடன் நடவடிக்கை எடுப்பதாகப் பதில ளிக்கிறார்.

இந்தியத்தூதர் டிக்ஸிற்றுக்கும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு மிடையே பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. ஜே.ஆர். கொழும்புக்கு கொண்டு வந்து விசாரித்துவிட்டு விடுவிப்பதாகக் கூறுகிறார்.

விடுதலைப்புலிகளின் தலைமைக்கு அறி விக்கப்படுகிறது.

ஐந்து கோரிக்கைகளை வைத்து உண்ணா நோன்பிருந்த தியாக திலீபனை வீரச்சா வடைய விட்டு மகிழ்ந்த இந்தியாவின் நய வஞ்சகத்தை விடுதலைப்புலிகள் தெளிவாகவே அறிந்திருந்தனர்.

கொழும்புக்கு கொண்டு செல்லக்கூடாது எனத் திட்டவட்டமாக மறுக்கிறார் தலைவர். இந்தியத் தளபதி மீண்டும் மீண்டும் தலை வருடன் தொடர்பு கொள்கிறான். தலைவரோ, 12 புலிகளோ தங்கள் முடிவை மாற்றவில்லை.

அன்று இரவு சிங்களப் படையினர் 12 விடுதலைப் புலிவீரர்களும் அடைக்கப்பட்டிருந்த அறையை உடைத்து அவர்களைக் கைது செய்ய முயன்றனர்.

மறைத்து வைக்கப்பட்ட சையனைட் குப்பிகள் வீரப்புலிகளின் குருதியில் கலக்குகின்றன.

உடைத்துப் புகுந்த படையினர் அவர்களுக்கு விலங்குபூட்ட முயற்சிக்கின்றனர் . மரணத்தை நோக்கிப் பயணிக்கும் போதும் வீரத்துடன் எதிர்த்துப் போராடுகின்றனர்.

மூத்த தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட11 புலிகளின் உயிர்கள் அந்த இடத்தி லேயே பிரிகின்றன. ஒரு புலி வீரன் மருத்து வமனையில் வீரச்சாவடைகிறான்.

குமரப்பா, புலேந்திரன் இருவருக்கும் திருமணமாகிச் சில நாட்களே ஆகியிருந்தன. இல்லற சுகத்தின் இனிமையை அனுபவிக்கத் தொடங்கிய அந்த நாட்களில் இலட்சியத்தை மட்டுமே நெஞ்சில் கொண்டு அவர்கள் தியாக காவியம் எழுதினர்.

விடுதலைப்புலிகளின் ஒப்பற்ற இலட்சியப் பற்றும் தியாக உணர்வும் இந்திய, சிங்களப் படைகளை மலைத்துப் போய் வாய் பிளந்து நிற்க ஆரம்பித்தன.

பன்னிரு புலிகளும் மீளாத்துயரில் ஆழ்ந்து ஒரு புதிய காவியம் எழுதிவிட்டனர்.

தாயக மண்ணே கதறி அழுதது!

தியாக திலீபனின் வீரச்சாவால் கடலாய் பெருகிய கண்ணீர் இன்னும் வற்றிவிடாத நிலையில் அருவியாய் பெருகி விழிமடல்களை மீண்டும் ஒரு முறை உடைக்கிறது விழிநீர் வெள்ளம்.

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை தீருவில் வரை இலட்சோப இலட்சம் தமிழ் நெஞ்சங்கள் திரள்கின்றன. குவிக்கப்பட்ட மலர்களில் கிடத்தப்பட்ட வித்துடல்கள் எமது மக்களின் கண்ணீரும், கோபமும் தலாட்ட தீருவில் நோக்கிப் பயணிக்கின்றன.

தீருவில் மேடையில் 12 விடுதலை வேங்கை களும் தீயுடன் சங்கமமாகின்றன. அக்கினியும் தான் புனிதமாகிவிட்ட பெருமையுடன் கொழுந்துவிட்டெரிகிறது.

ஆனால் தீருவில் எரித்த தீ அணைந்து போய் விடவில்லை. ஐந்து நாட்களிலேயே இந்திய - விடுதலைப் புலிகள் போராக வெடித்தது. இறுதி யில் 1990இல் இந்தியா அவமானத்துடன் நாட்டை விட்டு விரட்டப்பட்டது.

ஆம்!

தீருவிலில் எரிந்த தீ எங்கும் பரவி இறுதியில் மணலாற்றில் முழு வீச்சுடன் கொழுந்துவிட்டெரிந்து இந்தியாவின் அகந் தையை அழித்தது.

விடுதலைப்புலிகளின் இலட்சிய உறுதியை யும் வீரத்தையும் உலகம் புரிந்து கொண்டது.

# TAMIL RADIOs and TV in AUSTRALIA

| சேவை | Station | METRE/CHANNEL | BROADCASTING TIME | | CITY | ALSO THROUGH |
|---|---|---|---|---|---|---|
| | | | DAY | TIME | | |
| SBS தமிழ் வானொலி | SBS | FM 97.7 Sydney | SUNDAY | Differ to each city | All Cities | ATBC & Inpathamil Oli |
| தமிழ் முழக்கம் (Tamil Mullkam) | Radio 2000 | FM 98.5 | SATURDAY | 8.00-10.00 PM | Sydney | ATBC |
| முத்தமிழ் வானொலி (Muthamil Malai) | 2CCR | FM 90.5 | SUNDAY | 6.30-8.00 PM | Sydney | Inpaththamil Oli |
| இன்பமான இரவினிலே | SWR | FM 99.9 | FRIDAY | 10.00-12.00 AM | Sydney | ATBC |
| உதய கீதம் (Uthaya Keetham) | SWR | FM 99.9 | FRIDAY | 12.00-02.00 PM | Sydney | ATBC |
| இன்பத்தமிழ் ஒலி (Inpatamil Oli | Inpatamil | SPECIAL METRE | | 7 DAYS 24 Hours | 3 Cities | Also NZ thru Optus |
| AUS Tamil Broadcasting Co-op | ATVC | SPECIAL METRE | | 7 DAYS 24 Hours | 3 Cities | Also NZ thru Optus |
| தமிழ்க் குரல் (Tamil Kural) | 3CR | AM 855 | MONDAY | 6.30-8.00 PM | Melbourne | Inpaththamil Oli |
| நிதர்சனம் (Manifest) | 3CR | AM 855 | SATURDAY | 12.00-12.30 PM | Melbourne | Inpaththamil Oli |
| தமிழ் ஓசை (Tamil Osai) | 3ZZZ | FM 92.3 | THURSDAY | 8.00-9.00 PM | Melbourne | Inpaththamil Oli |
| சங்கநாதம் (Sanganatham) | Voice Of Dan | FM 97.1 | SUNDAY | 8.00-10.00 PM | Melbourne | ATBC |
| வானிசை (Vaanisai) | | FM 88.9 | FRIDAY | 6.00-8.00 PM | Melbourne | ATBC |
| வானமுதம் (Vaanamutham) | | FM 88.6 | TUESDAY | 6.00-8.00PM | Melbourne | Inpaththamil Oli |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 4EB | FM 98.1 | SUNDAY | 9.00-10.00 PM | Brisbane | |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 4EB | FM 98.1 | FRIDAY | 5.00-6.00 PM | Brisbane | |
| கன்பரா தமிழ் வானொலி | CMS | FM 91.1 | THURSDAY | 8.00-9.00 PM | Canberra | |
| கன்பரா தமிழ் வானொலி | CMS | FM 91.1 | SATURDAY | 11.00-12.00 Noon | Canberra | |
| கன்பரா தமிழ் வானொலி (இளைஞர்) | CMS | FM 91.1 | SUNDAY | 11.00-12.00 Noon | Canberra | |
| தமிழ் ஒலி (Tamil Oli) | 6EBA | FM 95.3 | MONDAY | 7.30-8.00 PM | Perth | |
| தமிழ்ச் சோலை (Tamil Solai) | 6EBA | FM 95.3 | FRIDAY | 10.30-12.00 PM | Perth | |
| தமிழ்ச் சங்க வானொலி | Top FM | FM 104.1 | SATURDAY | 8.00-9.00 PM | Darwin | |
| தமிழ்ச் சங்க வானொலி | Top FM | FM 104.1 | MONDAY | 7.00-8.00 PM | Darwin | |
| GTV | Optus Channal | SPECIAL CHANNEL | 7 DAYS | 24 Hours | All Cities | Also in NZ |

## படைகளின் பசிக்கு...

15ஆம் பக்கத் தொடர்ச்சி

நவநீதம்பிள்ளை அவர்கள், வேறு நாடுகளில் இருந்து இலங்கை வரும் அதிகாரிகள், வழமை போன்று இலங்கை அதிகாரிகளைச் சந்தித்து, அவர்கள் சொல்வதை அப்படியே நம்பி திருப்பிச் சொல்லும் ஒருவராக அல்லாமல், 700 பாதிக்கப்பட்ட தமிழர்களை நேரடியாகச் சந்தித்து, உண்மைகளை அறிந்து அறிக்கை சமர்ப்பித்து, மனித உரிமை ஆணையாளர் ஒருவருக்கான தகுதிகளை தான் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அதனை விட, அண்மையில் அவுஸ்ரேலிய தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், தமிழர்கள் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்ட நிலையிலும், பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, ஐக்கியநாடுகள் சட்டத்தினை மீறுவதாக உள்ளது என்று குறிப்பிட்டதுடன், இப்போதும் இலங்கையில் தமிழர்களுக்கு அரச படையினரால் தமிழர்களுக்கு ஆபத்து இருப்பதாகவும், அகதிகளாக தஞ்சம் கோரி வரும் தமிழர்களை உடனடியாக திருப்பி அனுப்பாமல் அவுஸ்ரேலிய அரசாங்கம் அவர்களது விண்ணப்பங்களை தனித்தனியாக கருத்திலெடுத்துப் பரிசீலிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கிறார்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் ஞானமானது கலம் கடந்த ஞானமாகவே இருந்து விடாமல் தகுந்த நேரத்தில் சரியான முடிவெடுத்து எதிர்கால வாழ்க்கைக்காக ஏங்கிக் காத்திருக்கும் தமிழர்களை மீண்டும் உயிராபத்தில் தள்ளி விடாது அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து காப்பாற்றி நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்பதே அனைத்துத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.




## தலைவரின் வீடு...

10-11 ஆம் பக்கத் தொடர்ச்சி

மறவர்கள் எரிந்து, கருகி மாண்டு போனார்கள். அப்படி இருந்தும் கூட எஞ்சிய புலிகள் தலைவரை வீட்டில் இருந்து வலுக்கட்டாயமாக பாதுகாப்பான் இடத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

முள்ளிவாக்காலிலே பல்லாயிரக்கணக்கில் எம்மின உயிர்களைக் குடித்து போரில் வென்றதாக மார்தட்டியது சிங்களப் பேரினவாதப்படை. எங்கள் இனப்போராட்டத்தின் தலைவிதியைத் தீர்மானித்த தலைவரின் வீட்டை முதலில் தனது தளமாக மாற்ற யோசித்த படைத்தரப்பு, பின்னர் அந்த எண்ணத்தைக் கைவிட்டு சுற்றுலா மையமாக்க நினைத்தது. பொதுமக்களை பிரபாகரனின் வீட்டைப்பார்வையிட அனுமதி வழங்கப்பட்ட நாள்முதலாக கூட்டம் அலைமோதியது.

தங்களின் வெற்றியை பற்றிய விம்பமே அந்த வீட்டைப் பார்வையிடுபவர்களுக்கு ஏற்படும் என்பதே இராணுவத்தின் எண்ணம்.ஆனால் அதற்கு மாறாக தலைவரின் வீட்டைப் பார்வையிட்ட சிங்களவர்களும் சரி, தமிழர்களும் சரி, வெளிநாட்டவர்களும் சரி எவரும் அந்த வீட்டை இராணுவத்தின் வெற்றிச்சின்னமாக கருதவில்லை. மாறாகப் புலிகலின் போரியல் ஆற்றலின் குறியீடாகவே கருதி,



தம்முடைய ஆச்சரியங்களையும் வெளிப்படுத்தினர். இது புகைச்சலைக் கிளப்பியது அரசுக்கு.

மக்களின் இந்த நம்பிக்கைகள் மீண்டும் புலிகள் பற்றிய ஞாபகமூட்டல்களை வளர்த்து, அதன் விளைவாக எப்போதும் உரிமைக்குரலோடு இருக்கும் தமிழர்களின் இருப்பு தொடரக் கூடும் என்று அது கருதியது.

மாவீரர் துயிலுமில்லங்களை அழித்தொழித்து தமிழ் மக்கள் மனத்திலிருந்து மாவீரர்கள் பற்றிய நினைவுகளைத் துடைத் தழிக்கலாமென்று நினைத்த பேரினவாத அரசு, தலைவரின் வீடும் தமிழ்மக்களுக்கான எழுச்சிக் குறியீடாக மாறிவிடுமென்று அஞ்சி அதையும் அழித்துவிடத் துணிந்தது.

எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றினாற்போல் வடமாகாணசபைத் தேர்தல் முடிவுகள் அரசின் கோபத்தைக் கிளறிவிட்டது. தேர்தலில் மரணஅடி வாங்கிய சிங்களப் பேரினவாத அரசும் அதன் அடிவருடிகளும் பொருமிக்கொண்டிருந்த காலத்தில்தான் தலைவரின் வீட்டைத் தகர்த்தழிக்கும் வேலையைத் தொடங்கியது சிங்களப்படை.

கண்ணிவெடியைச் செயலிழக்கச் செய்யப்போவதாக சொல்லி, தலைவரின் வீட்டைக் குண்டுவைத்துத் தகர்த்துள்ளது சிறிலங்கா இராணுவம். ஆனால் அந்தபகுதியில் கண்ணிவெடியகற்றல் பூர்த்தியாகி வாரக்கணக்காகி விட்டதென்றும், அதன்போது கண்டுபிடிக்கப்பட்ட வெடிபொருள்கள் யாவும் குறித்த செயற்பாட்டில் ஈடுபட்ட நிறுவனத்தால் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டன என்பதும் மக்களுக்கு தெரியும்.

ஆயினும் உண்மையை வெளிக்காட்டாமல் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர்.மீளக்குடியமர்ந்த பின்னும் இடம்பெயர் வாழ்வு அவர்களை விட்டு நீங்கவில்லை. சரியாக மாலை 6.41க்கு எழுந்தது பேரோசை.

எங்கும் அதிர்வு. எங்கள் இனத்தின் நம்பிக்கையின் குறியீடாக இதயத்தின் இருப்பிடமாக இருந்த அந்தவீடு ஒற்றைவெடியில் தூர்ந்து, இடிந்து போனது.

ஆனால் வெறும் கட்டடங்களைத் தகர்ப்பதால் மக்கள் மனத்திலிருந்து அந்த எழுச்சி வடிவத்தைக் கலைத்துவிட முடியாது. மாவீரர் துயிலுமில்லங்களைச் சிதைப்பதன் மூலமோ நினைவுத் தூபிகளை இடிப்பதன் மூலமோ தலைவரின் வீட்டைத் தகர்ப்பதன் மூலமோ தனது கோபத்தையும் வெறியையும் சிங்களப் பேரினவாதம் தணித்துக் கொள்ளலாமேயொழிய, தமிழ் மக்களின் மனங்களில் இந்த எழுச்சிச் சின்னங்களின் நினைவுகளையோ விடுதலைக்கான அவாவையோ அழித்துவிட முடியாது.

விடியலுக்கான எமது பயணத்தில் விதைகளையும் விழுதுகளையும் தமது நெஞ்சிலிருத்திப் பயணிப்பர் தமிழ்மக்கள்.

## நல்லதோர் வீணை செய்தே...

03ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆடுபவர்களல்லாவா அவர்கள்.

எனவே எங்களின் பிரதிநிதிகளை இன்னொரு நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப எப்படித்தயாரிக்க முடியும் என்ற ஆவேசம் மக்களிடம் பிறந்துள்ளது. வாக்களித்து தெரிவு செய்வது நாங்கள். அப்படியிருக்கையில் இவர்கள் எப்படி இந்தியத்தாளத்துக்கு



ஆடமுடியும்? என்று அவர்கள் நினைப்பதில் தவறென்ன இருக்கமுடியும். தாங்கள் தவமாய் தவமிருந்து பெற்ற வெற்றியைக் கூட்டமைப்பு தன் சுயநல அரசியலுக்காக நாசம் செய்துவிட்டதாகவே எண்ணுகிறார்கள்.

'சரஸ்வதி சபதம்' என்ற படத்தில் பிச்சை எடுக்கும் ஒரு பெண்ணுக்கு யானை மாலையைப் போட்டதால், அவள் மகா ராணியாகிவிடுவாள் திடீர்ப் பணக்காரியான புளுகத்தில் தலைகால் தெரியாமல் நடந்து, இறுதியில் உயிரை விடும் நிலைக்கு தள்ளப்படுவாள். அது போன்றே மக்கள் வழங்கிய மந்திரக்கோலான மாகாணசபை வெற்றியை எப்படிப்பயன்படுத்துவதென்று தெரியாமல் தடுமாறு கிறது கூட்டமைப்பு. கிட்டத்தட்ட குரங்குகைப்பூமாலை போல மாகாணசபை வெற்றியை கூட்டமைப்பினர் சின்னாபின்னப்படுத்திவிட்டனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி சொன்னதைப் போன்று " வடக்கு மாகாண சபையில் தோற்றதால் ஏற்பட்ட வலியை விடவும், தனக்கு முன்பாக விக்னேஸ்வரன் பதவிப்பிரமாணம் செய்ததால் உண்டான மகிழ்வும் வெற்றியும்பெரிதானவை" என்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும்.

மக்கள் தீர்ப்பின் படி தான் அரசியல்வாதிகள் நடக்கவேண்டுமே தவிர, தங்கள் சுயநலனுக்காக மக்கள் தீர்ப்பை அரசியல்வாதிகள் வளைக்கக்கூடாது.அப்படி வளைக்கமுற்பட்டவர்கள் வரலாற்றின் பக்கங்களில் இருந்தே காணாமல் போயிருக்கிறார்கள்.

தங்கள் நம்பிக்கைகள் தகர்ந்து போய்விட்டதோ என்ற சோகத்தில் மீண்டும் ஒப்பாரிகளின் தேசத்தில் உழல தம்மை தயார்படுத்துகிறார்கள் மக்கள். எப்போதும் அவர்கள் சிலுவையேந்திகள் தானே? இன்னும் நிறையச்சிலுவைகள் இவர்களுக்கும், சொகுசு வாகனங்கள் வென்ற அரசியல்வாதிகளுக்கும் காத்திருக்கின்றன. ஆனால் காலம் எவருக்காகவும் தீர்ப்பெழுதக் காத்திருப்பதில்லை. காலத்தின் தீர்ப்பில் கடைசியில் வெல்லப்போவது மக்களாகத்தான் இருக்கும்.

## வடக்கு வெற்றியும்...

14ஆம் பக்கத் தொடர்ச்சி

என்ற செய்தி கிழக்கு மாகாணசபைத் தீஉமானத்தால் அரசுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பதவியேற்கும் முன்னரேயே வட மாகாணசபைக்குக் கிடைத்த வெற்றி இது என்றுதான் கூறவேண்டும். இந்திய அரசும்மாகாணசபைகளின்அதிகாரங்கள் பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தில் உள்ளவாறு வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது. வடமாகாண சபையுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி அதற்கூடாகத் தமிழர்களுக்கு உதவுகின்ற தன் விருப்பத்தையும் அது வெளிப்படுத்தியிருக்கிறது.

### அரசுக்கு ஆபத்து

ஐ.நாவின் நிலைப்பாடு, அமெரிக்காவின் கருத்து, இந்தியாவின் வலியுறுத்தல், கனடாவின் கரிசனை என்பவை இப்போது நேஉகோட்டில் பயணம் செய்யத் தொடங்கியிருக்கின்றன. இவற்ச் சமாளித்து விடலாம் என்று இலங்கை அரசு கனவு காணுமானால் அது அரசுக்கு ஆபத்தாகவும் முடியலாம்.

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தொடர்ந்தும் புறக்கணித்துவிடலாம் என்று அரசு நினைப்பது சரியல்ல. தமிழர்களின் குரலை மதித்து வடமாகாணசபையுடன் சுமுகமான உறவுகளைப் பேணித் தமிழஉகளின் உள்ளங்களை வெல்வதில்தான் அரசின் வெற்றியும், நாட்டின் ஒருமைப்பாடும் தங்கியிருக்கிறது.

எவ்வாறாயினும், கனிந்துவரும் சூழ்நிலையைச் சரிவரப் பற்றிப்பிடிக்கத் தமிழா் தரப்பும் தயாராக வேண்டிய நேரம் இது. கிழக்கு மக்களும் வடக்கு மக்களும் தம்மைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஜனநாயக முப்படி தெளிவாகவே ஒப்படைத்திருக்கிறாஉகள். செயற்பட வேண்டியவர்கள் தலைவர்கள்தாம். மாகாண அமைச்சுப் பதவிகளை எவ்வாறு பங்கிட்டுக்கொள்வது என்று சச்சரவுப்படுவதற்கு இது தருணமல்ல.



### பதவி பெரிதல்ல

பதவியைப் பெரிதெனக் கருதாது கரும மாற்றுபவர்களே தமிழர்கள் என்பதை நிரூபிக்கக்கிடைத்த சந்தர்ப்பம் இது. காங்கேசன்துயில் 1972 ஒக்டோபரில் தந்தை செல்வா பதவி துறந்து அரசுக்குச் சவால் விட்டதையும், 1983 இல் தேஉதலே இல்லாமல் அரசை மேலும் ஆறு வருடங்கள் நீடிக்கச் செய்த ஜே.ஆரின் முயற்சிக்கு எதிஉப்புத் தெரிவித்து தமிழர்விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவிகளைத் துறந்து செயலாற்றியதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கட்சிகள் ஐந்தாக இருக்கலாம்: மாவட்டங்களும் ஐந்தாக இருக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று வரும்போது நாம் ஒரே சிந்தனை கொண்டவர்கள்: தமிழ் மக்கள் என வரும்போது இலங்கைத் தமிழர்கள் அனைவரதும் ஆன்மாவானவர்கள் என்ற உண்மையை உணர்ந்து வட மாகாணசபை செயற்பட வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

# FLY WINGS
## Travel Agents



Lic No : 31883

- Competitive Airfares
- Accommodation & Tours
- Travel Insurance
- Interstate Coach Bookings



For All Your Travel Needs Contact Your Friendly Travel Agent

SHOP 4 DANDENONG ARCADE, 236 LONSDALE STREET, DANDENONG 3175

PH: (03) 9791-7522 FAX: (03) 9794-7844 EMAIL: fly1@net2000.com.au

# LOANS! LOANS! LOANS!



வீடு வாங்கும் எண்ணமா?
வியாபாரம் ஆரம்பிக்க,
விரிவாக்க விருப்பமா?
முதலீடு செய்ய எண்ணமா?
சகல விதமான கடனுதவிகளும்
சிறப்பாக செய்து தரப்படும்.

Residential / Investment
Commercial Loan and
Equipment Finance

For obligation free consultation & Assessment
A friendly consultation backed up by more than
20 years of banking experience

Contact
Vivek N. Vivekananthan
0407 561 269


Tantalizing your taste buds @
EXOTIC INDIAN &
SRI LANKAN CUISINE
THE MANGO TREE
TAKEAWAY & CATERERS
Between 12.00 - 2.00 p.m
Takeawy only
For Limited Time only
*Food images are for illustrative purposes only and please check the actual food before confirming the order.
NEW!
MEAL
$5 DEAL
LUNCH DEAL
Rice
01 Meat Curry
02 Veg. Curries
Mango Tree,
12, Clow Street, Dandenong, Vic 3175
(Opposite to KFC)
(03) 9791 1111, 0403 058 808
www.mangotreetakeaway.com.au